# வடவை மாதா மலர்

**உள்ளே மிளிர்வன**


- ஆசிரியர் பேனா
- குழந்தைகளின் நுண்ணறிவுத்...
- நீத்தார் நினைவேந்தல் பா
- குழந்தைகளை உருவாக்குவோம்
- அனைத்து புனிதர்கள் தினம்
- இது ஒரு கழுகின் கதை
- வாழும் வழிமுறைகள்...
- அன்னை மரியின் ...
- குழந்தைப் பருவம்
- பயன்படுத்துவோம்! கல் உப்பு...!
- உலக பொது அறிவு
- அன்பிய பொறுப்பாளர்கள்...
- பங்கு நிதிக்குழுவின் கூட்டம்
- வத்திக்கான் செய்திகள்
- தினசரி கடைப்பிடிக்க வேண்டிய...
- கணக்குப் புதிர்கள்
- படைப்பாளிகள் பக்கம்
- மருத்துவக் குறிப்பு
- வடவை நடந்து வந்த பாதை
- நிகழவிருப்பவை
- குரு மாணவர் நிதி
- விவிலிய வினாப்போட்டி
- செய்திகள் சிலவரிகளில்
- அன்றாட உணவு
- விவிலிய குறுக்கெழுத்து...
- வரவு செலவு
- விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி


**விவிலியம் அறிவோம்**

2017 நவம்பர் மாதத்திற்கான பாடம்

**"திமொத்தேயு 1-2, தீத்து'**

தேர்வு நாள்: 10.12.2017
பிற்பகல் 2.00 மணி

**"ஓவியம் வரைதல்"**

தேர்வு நாள்: 10.12.2017
பிற்பகல் 2.00 மணி

**வாசகர்கள் தங்கள் படைப்புகளை
16-ம் தேதிக்குள்
பங்கு அலுவலகத்தில்
சமர்ப்பிக்கும்படி
கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**



அடுத்த மாத இதழ்

**"கிறிஸ்து பிறப்பு இதழ்"**


**மாதா மலர் தொடர்பு முகவரி:**

பங்குத்தந்தையர்: பேரருட்திரு. **ரா. ததேயுஸ் ராஜன்**

அருட்திரு. **தா. சூசைமணி**

**பரிசுத்த திருக்குடும்ப ஆலயம், வடக்கன்குளம்.**

போன்: 04637-230134, 232360 www.vadavaimatha.net

**மாதா மலர் தொடர்பு: Email: holyfamilyvadavai@gmail.com**

# ஆசிரியர் பேனா

**மாதா மலர் அன்பர்களே!**

*உங்கள் அனைவரையும் குழந்தைகள் சிறப்பிதழ் எனும் நவம்பர் மாத இதழ் வழியாகச் சந்திப்பதில் ஆனந்தம் அடைகிறேன்.*

*பாசமுள்ள குழந்தைகளே! உங்கள் அனைவருக்கும் குழந்தைகள் தின வாழ்த்துக்களும், ஆசீரும், செபமும்! உங்கள் வாழ்வு முழுவதும் குழந்தை மனம் உங்களில் மாறாதிருக்க உங்களுக்காகச் செபிக்கிறேன். உங்கள் எதிர்காலமும், பெற்றோர்கள் உங்களுக்காகக் காணும் கனவுகளும் நனவாகிடச் செபிக்கிறேன்.*

*பாசமுள்ள குழந்தைகளே! நம் வெற்றிக்கு எது தடை தெரியுமா? குழந்தைத்தனம்* (Childishness)! *குழந்தைத்தனம், குழந்தை மனம்* (Childlikeness) *இரண்டும் வேறுபட்டவை. நம்மையும் நம் சுற்றத்தாரையும் ஆனந்தமாக வைத்திருப்பது நம்மில் உள்ள குழந்தை மனம். அது மாறும்போது பலர் நம்மை முகம் சுளித்து வெறுப்பார்கள்.*

*நிலவின் அழகைப் பார்த்து, வாயைப் பிளந்து அம்மா ஊட்டும் சோற்றை வாங்குவது குழந்தை மனம். ஆனால் அந்த நிலவைப் பிடித்துத்தரச் சொல்லி* ***அடம் பிடிப்பது*** *குழந்தைத்தனம். விந்தையில் வியப்பது குழந்தைமனம்.* ***அனைத்தையும் சொந்தமாக்க நினைப்பது*** *குழந்தைத்தனம். எடுத்தாலும் கொடுத்தாலும் புன்னகைப்பது குழந்தைமனம்.* ***கிடைப்பதில் மட்டுமே மகிழ்வது*** *குழந்தைத்தனம். எப்போதும் சந்தோசமாக இருக்கனும்* ***எதிர்விளைவைப் பற்றிக் கவலையில்லை.*** *இப்போது எனக்கு என்ன லாபம் என்று மட்டும் கணக்குப்போடுவது குழந்தைத்தனம். இது மிகவும் ஆபத்தானது!*

*விவசாயிக்கு ஒரு மகன். அவன் படிக்கவில்லை. எனவே தந்தை அவனை மாடுமேய்க்க அனுப்பினான். அந்த மாட்டில் சிறிய மணி கட்டப்பட்டு இருந்தது. வழிப்போக்கன் ஒருவன் அவனிடம் அந்த மணியின் விலையை கேட்டான் 5 ரூபாய் என்று மாடு மேய்ப்பவன் பதில் சொன்னான். வழிப்போக்கன் 20 ரூபாய் கொடுத்து மணியை வாங்கினான். மதிய நேரம் சிறுவன் கண்ணயர்ந்தான். வழிப்போக்கன் சத்தமில்லாமல் அந்த மாட்டை ஓட்டிக்கொண்டு போய்விட்டான். அந்த சிறுவனுக்கு 5 ரூபாய் மணியை 20 ரூபாய்க்கு கொடுத்ததில் சந்தோசம். ஆனால் அந்த மணி இருந்திருந்தால் மாட்டை ஓட்டிக்கொண்டு போகும்போது மணியின் சத்தத்தில் சிறுவன் விழித்திருப்பான். அவன் மாட்டை இழந்திருக்க மாட்டான். விளைவைப் பற்றி யோசிக்காததால் இழப்பு மிகப்பெரிது. இதுதான் குழந்தைத்தனத்தின் விளைவு.*

*வழிப்போக்கனைப்போல இவ்வுலக சிற்றின்பங்கள் நம்மை ஏமாற்றுகின்றன. துவக்கத்தில் அவை தரும் சுகத்தில் மயங்கி விடுகிறோம். பின்பு அந்த சுகங்களே நம்மைச் சோகத்தில் ஆழ்த்துகின்றன. இவற்றிற்கு கொஞ்சம் இடம் கொடுத்தால் நம் மனசில் பெரிய ஆக்ரமிப்பை ஏற்படுத்திவிடும். சிறுவனின் கவனம் எளிய வழியில் கிடைக்கும் பணத்தில் இருந்தது. மிக எளிதாகக் கிடைக்கும் லாபத்தை நினைத்ததால் பெரிய இழப்பு நேரிட்டது. வெறும் ஆசைகளுக்கும் இச்சைகளுக்கும் அடிமையானவரின் கதி இதுதான். இவர்கள் நல்லொழுக்கத்தையும், நல்ல பழக்கத்தையும் கடைபிடிப்பதில்லை. இழப்பையும் இன்னல்களையும் அனுபவிக்கும் போதுதான் வாழ்வில் அனைத்திற்கும் அர்த்தம் உண்டு என்பதையும் ஒழுக்கமில்லா வாழ்வு உருப்படாது என்பதையும் உணர்கின்றனர்! எனவே குழந்தை மனதுடன் வாழ ஒழுக்கமுடனும், நல்ல பழக்கமுடனும் வாழ்வோம்.*

என்றும் இறையாட்சிப் பணியில்
அருட்பணி. **ரா. ததேயுஸ் ராஜன்**
பங்குத்தந்தை

# குழந்தைகளின் நுண்ணறிவுத் திறனும்... எதிர்கொள்ளும் சவால்களும்...

எல்லா குழந்தைகளும் நன்றாகப் படிக்க வேண்டும் என்பது தான் நமது ஆசை. குழந்தைகளின் ஆசையும் கூட. சில குழந்தைகளுக்கு புரிந்துகொள்கின்ற ஆற்றல் குறைவாகவே இருக்கும். சில குழந்தைகளுக்கு இயல்பாகவே அதிகப்படியான நுண்ணறிவு அமைந்திருக்கும். அவர்களை வரப்பிரசாத நுண்ணறிவாளர்கள் (Gifted Children) என்று கௌரவிப்பதுண்டு. ஆனால் ஆய்வு முடிவுகள் அதிர்ச்சியளிக்கின்றன. சிறுவயதில் தற்கொலை செய்கின்ற பலரும், எளிதில் மன உளைச்சலுக்கு ஆளாகுகின்ற பலரும் இப்படி அபரிமிதமான நுண்ணறிவை அடைகாத்து வைத்தவர்கள் என்று.

இக்குழந்தைகள் கல்வியறிவில் கலங்கரை விளக்கங்களாக இருப்பதுப்போல உணர்ச்சித் திறனிலும் உச்சத்தில் இருப்பார்கள் என எண்ணுவது இன்று பெற்றோர்கள் செய்கின்ற மிகப் பெரிய தவறு. படிப்பில் சிறந்து விளங்குகின்ற மாணவர்கள் எல்லாத் துறையிலும் சிறந்து விளங்குவார்கள் என்று சொல்ல முடியாது. நாம் அதனை எதிர்பார்ப்பதும் தவறு. உதாரணமாக, ஆறாம் வகுப்பில் முனைவர் பட்டத்திற்கான நுண்ணறிவைப் பெற்றவன், உணர்ச்சித் திறனில் ஆறாம் வகுப்பைத் தாண்டாமல் இருப்பான் என்பதை அவர்கள் உணர்வதில்லை. காரணம் குழந்தைகளின் உணர்வுகள் மாறுபடுகின்றன.

நம்முடைய மிகப் பெரிய பிரச்சனையே ஒருவரிடம் தூக்கலாக இருக்கும் ஒரு பரிமாணத்தை மற்ற பரிமாணங்களுக்கும் பொருத்திப் பார்க்கும் அறியாமை. ஒருவர் அழகாக இருந்தால், அறிவாகவும் இருப்பார் என்று முடிவுகட்டுகின்ற காட்சிப் பிழை. இந்த மனநிலையே அவர்களை உணர்ச்சித் திறனில் சரியாக எடைபோடாமல் இருக்கச் செய்கிறது.

அதிகப்படியான நுண்ணறிவு ஒருவகையில் ஆபத்தானது. சம வயது குழந்தைகளைக் கடந்து படிப்பில் முன்னேறுகிற இந்த குழந்தைகள் தனிமைப்பட்டுவிடுகிறார்கள். பெரும்பாலும் புத்தகத்துடன் இருந்துவிடுகிறார்கள். தங்களை அவர்கள் எல்லா இடங்களிலும் மேம்பட்டவர்கள் என்று நிரூபிக்க வேண்டிய நெருக்கடியை சமூகம் உண்டாக்கிவிடுகிறது. அவர்கள் மீது பெற்றோர்களும், கல்வி நிறுவனங்களும் எதிர்பார்ப்பைத் திணிக்கின்றனர். இவர்களால் மற்ற மாணவர்களோடு இயல்பாகப் பழக முடிவதில்லை. எப்போதும் வெற்றியைக் குறித்த ஒரு பயமும் பதற்றமும் இருந்து கொண்டே இருக்கும்.

மற்ற மாணவர்களும் இவர்களிடம் பழகுவதைத் தவிர்த்துவிடுகிறார்கள். கர்வம் பிடித்தவர்கள் என்ற முத்திரையும் குத்தப்படுகிறது. தாழ்வு மனப்பான்மையின் காரணமாக அவர்களைத் தங்கள் வட்டத்தில் இணைத்துக் கொள்ள சராசரி மாணவர்கள் தயாராக இருப்பதில்லை. எனவே விளையாடவோ, பொழுதுபோக்கில் பங்கெடுக்கவோ இவர்களால் முடிவதில்லை. இது அவர்கள் உள்ளத்தில் வெற்றிடத்தை ஏற்படுத்திவிடுகிறது. படிப்பைத் தாண்டிய வேறு செயல்பாடுகளில் அவர்களால் செம்மை சேர்க்க முடிவதில்லை. நன்றாகப் படித்தால் மட்டும் போதும் என்று நினைக்க கூடிய பெற்றோர்களும் உண்டு. இதனால் அவர்கள் உலகம் ஒரே வண்ணம் கொண்டதாக மாறிவிடுகிறது. இவர்கள் தங்களைத் தாண்டிச் செல்ல முடிவதில்லை. நண்பர்கள் இல்லாத உலகம் சூனியமாகிவிடுகிறது. அறிவு ரீதியாக அவர்கள் யாரை ஒதுக்குகிறார்களோ, அவர்களும் இவர்களை வயதின் காரணமாக சேர்த்துக்கொள்ள முடிவதில்லை.

ஒவ்வொரு வயதுக்கும் ஒவ்வொரு விதமான மனநிலை இருக்கிறது. பொழுதுபோக்குகள், பழகும் விதம், கேலி செய்வது, அரட்டையடிப்பது போன்றவை வேறுபடுகின்றன. எனவே அவர்கள் யாரோடும் பழக முடியாத நிலையில் தவித்துப் போகிறார்கள். இவர்கள் குடும்பமும் அன்னியப்பட்டுவிடுகிறது. உடலைக் காட்டிலும் மூளை வேகமாக முதிர்ச்சியடையும் போது ஏற்படும் ஒருவித விரக்தி இக்குழந்தைகளைத் தற்கொலைக்கும், மனச் சோர்வுக்கும் தூண்டுகிறது. பெற்றோர்களும் அவர்களுடைய இதயத்தைப் பற்றி கவலைப்படாமல் மூளையையே முதலீடாக நினைக்கிறார்கள். பள்ளிப் படிப்பு, சிறப்பு வகுப்புக்கள், வீட்டுப் பாடம் என்ற சுமை ஒருபுறம் இருக்க இந்த சுமைகளால் சோர்வடைந்த மாணவர்களை, படிப்பை காரணம் காட்டி பள்ளிக்கூடத்தையே மாற்றிவிடுகின்றனர் சில பெற்றோர். இது அந்த குழந்தைகளுக்கு உறவு ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் பெரிய மன அழுத்தத்தை ஏற்படுத்துகிறது.

சில பள்ளிகளில் சில மாணவர்களை சிறந்த மாணவர்கள் என்று அடையாளம் காண்பார்கள். அவர்கள் மாநில அளவில் சாதனை புரியவேண்டுமென்று வலியுறுத்துவார்கள். தொடர்ந்து அந்த மாணவர்களின் மனத்தில் அவர்கள்தான் முதல் மதிப்பெண் எடுக்கக்கூடியவர்கள் என்கிற அசாத்தியமான நம்பிக்கையை ஏற்படுத்துவார்கள். அந்த மாணவர்களை இதற்காக சம வயது தோழர்கள் ஈடுபடும் பொழுதுபோக்குகளையெல்லாம் உதறிவிட்டு புத்தகத்திலேயே முழுநேரமும் மூழ்குவார்கள். சில நேரங்களில் வகுப்புத் தேர்வில் ஒரு வினாவிற்கு விடை தெரியாவிட்டால் பெரிய ஏமாற்றம் ஏற்படும். தங்களைத் தாண்டி யாராவது அதிக மதிப்பெண் பெற்றுவிடுவார்களோ என்கிற பதற்றம் இவர்களைத் தொடர்ந்து நச்சரித்துக் கொண்டேயிருக்கும்.

பதற்றமும், பயமும் இரட்டைக் கிழவிகள். ஆகவே, பயத்தின் காரணமாக அவர்கள் தேர்வில் தவறு செய்வதற்கான வாய்ப்புக்கள் அதிகம். உலகமே அவர்களை எதிர்பார்த்திருக்கும் வேளையில் அவர்களுக்கு ஏற்படும் ஏமாற்றம் பெரிய அவமானமாகப் போய்விடும். அந்த நேரத்தில் அவர்களுக்கு வாழ்க்கையே வெறுத்ததுபோல இருக்கும். சில நேரங்களில் தற்கொலை உணர்வுகள் கூட வரும்.

பெற்றோர்கள் குழந்தைகளை மிகப்பெரிய சாதனையாளர்களாக உருவாக்க வேண்டுமென்று அவர்களுக்குத் தரும் தொல்லைகள் கொடூரமானவை. திரைப்படங்களில் வருவதைப் போல எல்லாப் பரிசுகளையும் தங்கள் குழந்தைகளே வாங்க வேண்டும் என நினைப்பது தவறு. எந்த குழந்தையும் எல்லாவற்றிலும் சிறந்து விளங்கும்படி இயற்கை படைப்பதில்லை. இதனை புரிந்துகொள்ள வேண்டும்.

சிலர் குழந்தைகளின் விருப்பத்தைப் புரிந்துகொள்ளாமல், தங்களது விருப்பத்தை குழந்தைகள் மீது திணிக்கின்றனர். உதாரணமாக ஒரு தகப்பனார் ஒருவர் அவரை போலவே அவர் மகனையும் பொறியியல் வல்லுநராக்க வேண்டும் என்று முடிவு செய்தார். அந்த மகனுக்கோ அதில் அதிக விருப்பமில்லை. படிக்க சொல்லி கட்டாயப்படுத்துவார். அடிப்பார். சாதாரணமாக விட்டிருந்தால் ஒருவேளை அவன் ஜெயித்திருப்பான். ஆனால் அவன் தந்தை இராணுவ அதிகாரிபோல் நடந்துகொண்டதால் நொந்துபோய்விட்டான். வெற்றியும் கனவாய் போய்விட்டது. சில குழந்தைகளுக்கு சில திறமைகள் இருக்கும். ஆனால் அவற்றை மகிழ்ச்சியாக அணுக வேண்டுமே தவிர அவற்றை வைத்து அந்த குழந்தைகளை

நிபுணர்களாக்குகிறோம் என்று பெற்றோர்கள் முடிவு செய்யக்கூடாது. ஏகப்பட்ட பயிற்சி வகுப்புகளுக்கு அனுப்பி அவர்கள் குழந்தைத்தனத்தை திருடக்கூடாது. அவர்களைத் தூங்கவிடாமல், விளையாடவிடாமல், மகிழ்ச்சியாக இருக்கவிடாமல் அடிமைபோன்று நடத்தினால் அவர்களால் எந்த துறையிலும் தொடர்ந்து கவனம் செலுத்த முடியாது. சிறிய தோல்விகளையும் கூட தாங்கி கொள்ள முடியாது.

குழந்தைகள் ஏதேனும் நிகழ்வில் தோல்வியடைந்து வந்தால் அவர்களை வாரியணைத்து ஆறுதலையும், நம்பிக்கையையும் தருவது நல்ல பெற்றோருக்கான அடையாளம். நாமே அவர்களை கைவிட்டால், யார் அவர்களின் கண்ணீரைத் துடைப்பார்கள்? ஏற்கனவே நொந்துபோய் இருக்கிற அவர்களின் கடைசி தந்திக் கம்பியையும் நாம் அறுத்து அவர்களை ஆதரவற்றவர்களாக்கக்கூடாது. குழந்தைகளிடம் இருக்கக்கூடிய அதிகப்படியான அறிவாற்றலையும் அவர்களிடம் திரும்ப சொல்லிஅடுத்தவர்களிடம் ஒட்டவிடாமல் செய்வதில் எந்த பயனுமில்லை. எல்லா நேரங்களிலும் அறிவார்ந்தவர்களிடமே பழகினால் வாழ்க்கையின் சூட்சுமங்களைக் கற்றுகொள்ள முடியாது. சண்டைபோடும் மாணவர்களிடமும் பழக வேண்டும். சரியாக படிக்காமல் விளையாடும் மாணவர்களிடமும் கைக்குலுக்க கற்று கொள்ள வேண்டும். அப்போதுதான் எங்கேயாவது அநியாயமோ, அக்கிரமமோ நடந்தால் சட்டையை பிடித்து உலுக்கும் சமார்த்தியம் ஏற்படும். எல்லா குழந்தைகளுமே இறைவனின் கொடைகள். அவர்களின் நுண்ணறிவை வைத்து நாம் எடைபோட வேண்டியதில்லை. மாறாக உணர்வுகளைப் புரிந்துகொள்ள வேண்டும்.

அருட்திரு. **தா. சூசைமணி**
உதவி பங்குத்தந்தை

## பற்றுருதியும் நம்பிக்கையும்

“கடவுள் வாக்கை நான் புகழ்கின்றேன்
கடவுளை நான் நம்பியிருக்கின்றேன்!
எதற்கு அஞ்சேன் அச்சம்
என்னை ஆட்கொள்ளும் நாளில் உம்மையே நம்பியிருக்கின்றேன்.
உம்மை நோக்கி மன்றாடும் நாளில்
என் எதிரிகள் புறமுதுகிட்டு ஓடுவார்!
அப்போது கடவுள் என் பக்கம் இருக்கின்றார்
என்பதை நான் உறுதியாய் அறிவேன்!
கடவுளின் வாக்கை நான் புகழ்கின்றேன்
ஆண்டவரின் வாக்கை நான் நம்புகின்றேன்!”

**ஆக்னல் ஷெரின்**
சூசையப்பர் அன்பியம்

# நீத்தார் நினைவேந்தல் பா

அகரமும் னகரமும் ஆனவனே, இறைவா!
நீ, வானமும் வையமும் வியப்பூட்டும்
பிரபஞ்சமும் படைத்தாய் – அவை
அழகாய் வாழ்கின்றன இன்றும்
சூரியன் சந்திரன் விண்மீன்களை
சுடர்வீசி ஒளிரச் செய்தாய் – அவையும்
நின்று நிறைவாக ஒளிர்கின்றன
மனிதரையோ,
நின் சாயலாய், உயிரூட்டி உணர்வூட்டி
உன்னத படைப்பாக உலவ விட்டாய்
ஆனால், அவன் வாழ்வை மட்டும் வரையறுத்து இடம் பெயர, நிலைமாறச் செய்து எம்மை கலங்க விடுவது ஏனோ!
இதை எண்ணுகையில்;
எம் நெஞ்சம் கனக்கிறது, தவியாய் தவிக்கிறது
அதே வேளை கிறிஸ்துவ நம்பிக்கை
எம்பைத் தேற்றி தெம்பூட்ட
பாடுகிறோம் யாம்!
எமைப்பிரிந்த பெற்றோரே உற்றாரே, உடன்பிறப்புகளே,
நண்பர்களே, அன்பர்களே, நலம்விரும்பிகளே,
“நேற்றும் மகிழ்ச்சி, நீர் எங்களோடு வாழ்ந்ததால்,
இன்றும் மகிழ்ச்சி, நீர் இறைவனோடு வாழ்வதால்,
நாளையும் மகிழ்ச்சியே! நீவிர் நிறைவாக இறையாசீரை எமக்காய் வேண்டுவதால்
எம் வாழ்வென்னும் பயணத்தில்;
நெருங்கி வாழ்ந்து நேசம் பொழிந்து
இன்று நித்திய நிசப்தத்தில் நிலைத்துவிட்ட – எம்
இரத்தத்தின் இரத்தங்களே!
நெஞ்சுக்கு நெருக்கமானோரே!
உங்கள் உறவால் மலர்ந்தோம் வாழ்ந்தோம்
வளர்ந்தோம் உயர்வாழ்வும் பெற்றோம் – எம்
உள்ளாழத்தில் நன்றியுடன் நினைக்கின்றோம்
செபிக்கின்றோம்; நீவிரும் செபிக்கக் கேட்கின்றோம்!

அருட்சகோதரி. **பொலன்ஷியா மேரி** OSM
மரியின் ஊழியர் இல்லம், வடக்கன்குளம்.

# குழந்தைகளை உருவாக்குவோம்

"மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்றும் அவர் சொற்கேட்டல் இன்பம் செவிக்கு" – என்றார் வள்ளுவப் பெருந்தகை. குழந்தைகளின் கள்ளமில்லா சிரிப்பைக் கண்டால் கயவனும் மயங்கி விடுவான். குழந்தையின் வாய்மொழிச் சொற்கள் நமக்குப் புரியாவிடினும் நம்மைப் பரவசப்படுத்தும் 'குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று' என்று பாடினார் கவிஞர் ஒருவர். 'குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள்; விண்ணரசு இவர்களைப் போன்றவர்களுக்கே உரியது' என்றார் நம் பெருமான் இயேசு. ஆக குழந்தையை விரும்பாதவர், அதன் சிரிப்பில் மயங்காதவர் அதன் மழலையில் மகிழாதவர் யாரும் இருக்க முடியாது.

குழந்தையே குடும்பத்தின் சொத்து. குழந்தையில்லாதவர் சேர்த்து வைக்கும் சொத்தினால் குழப்பம் தான் ஏற்படும். வருங்கால நாட்டினை ஏன் வருங்கால உலகையே உருவாக்கப்போகிறவர்கள் குழந்தைகள்தானே! இந்தியாவின் எதிர்காலம் வகுப்பறையின் நான்கு சுவர்களுக்குள் உருவாக்கப்படுகிறது என்றார் நம் நாட்டின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு. ஏனெனில் குழந்தைகள் வளர்க்கப்படுவதில்லை. உருவாக்கப்படுகிறார்கள்.

வெறுமனே வளர்க்கப்படும் குழந்தைகளின் ஆண்டுக்கொரு வயது கூடும்; வயதுக்கும் அதிகமான உடல் வளர்ச்சியும் உண்டாகும்.. இப்படிப்பட்ட குழந்தைகளால் வீட்டுக்கோ நாட்டுக்கோ எதிர்காலத்தில் எந்த பயனும் ஏற்படப்போவதில்லை. குழந்தைகள் உருவாக்கப்பட வேண்டும். குழந்தை உள்ளம் உருகிய மெழுகைப் போன்று இளகியது. உருகிய மெழுகில் நாம் எந்த உருவத்தையும் உருவாக்கலாம். இளமையில் நாம் எதைக் கற்றுக் கொடுக்கிறோமோ அதுவே அவர்கள் மனதில் பதிந்திருக்கும். அதனால்தான் "இளமையில் கல்" என்றார் ஔவையார். பிள்ளைகளிடம் அடிக்கடி பேச வேண்டும்; அன்புடன் பேச வேண்டும். நல்ல விஷயங்களைப் பற்றிப் பேச வேண்டும். குடும்பத்தில் எந்நேரமும் சண்டைபோடும் பெற்றோரின் பிள்ளைகள் எதிர்காலத்தில் முரடர்களாகவும், பழி வாங்கும் குணம் உடையவர்களாகவும் இருப்பார்கள் என ஆய்வுகள் கூறுகின்றன. வீட்டை விட்டு ஓடிப்போகும் சிறுவர்கள் கூறும் காரணம், எங்க அப்பா என்னைக்கும் குடிச்சிட்டு வந்து எங்க அம்மா கூட சண்டைபோடுவார், அடிப்பார். அதனால் எனக்கு வீட்டில் இருக்கப் பிடிக்கவில்லை என்பதாகவே இருக்கிறது.

அன்று குழந்தைகளைத் தூங்க வைத்தது அம்மாவின் தாலாட்டுப்பாட்டு; இன்று குழந்தைகளைத் தூங்க வைப்பது தொலைக்காட்சிப் பெட்டியும், கைபேசியும். அன்று குழந்தைகள் தாத்தா, பாட்டியுடன் உட்கார்ந்து விளையாடினார்கள். இன்று

அம்மாவின் கைப்பேசியுடன் உட்கார்ந்து விளையாடுகிறார்கள். கைபேசியை அவன் கையில் கொடுத்துவிட்டாப் போதும். அவன் கப்சிப்புன்னு ஆயிடுவான். தொந்தரவே பண்ணமாட்டான் என்று பெருமையாகப் பேசிக் கொள்கிறார்கள் இன்றைய பெற்றோர். இன்று அவன் உங்களை தொந்தரவு பண்ணமாட்டான். ஆனால் வளரும் நாட்களில் அதன்பாதிப்பால் பெற்றோரும், குழந்தையும் அவதிப்படுவார்கள் என்று அனுபவப்பட்டவர்கள் கூறுகிறார்கள்.

எனவே குழந்தைகளுடன் நீங்கள் விளையாடுங்கள்; உற்றார் உறவினருடன் விளையாட விடுங்கள். இன்றைய குழந்தைகள் சரியான அன்புக்காக ஏங்குகிறார்கள். நாம் குழந்தைகளுக்கு அளவுக்கு அதிகமான செல்லம் கொடுத்து அவன் கேட்பதையெல்லாம் வாங்கிக் கொடுத்து விடுகிறோம். இது உண்மையான அன்பு இல்லை. கண்டித்துத் திருத்தும் தந்தையே சிறந்தவர் என்று நமக்கு வேதாகமமே கூறித்தருகிறது. அதன்படி செயல்படுவோம். கண்டித்து வளர்க்காத பிள்ளைகள் கடிவாளம் இல்லாத குதிரை போன்றதாகிவிடுவான்.

சிறு வயதிலேயே பிள்ளைகளுக்கு நல்ல விஷயங்களை எடுத்துக்கூறி, நன்மையான காரியங்கள் செய்வதில் ஆர்வத்தைத் தூண்டி அவர்கள் எதிர்காலத்தில் நல்லவர்களாக வாழ வழி செய்ய வேண்டும். அதற்காக உங்கள் விருப்பத்தை எல்லாம் அவனிடம் திணிக்காதீர்கள். உங்கள் விருப்பத்தை அவன் ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலையை உருவாக்குங்கள். சிறு வயதில் பெற்ற அறிவையும் அனுபவங்களையும் கொண்டே விஞ்ஞானிகளும், மகான்களும், மேதைகளும் உருவாகியுள்ளனர்.

அண்மையில் ‘நீட்’ தேர்வுக்கு எதிரான போராட்டத்தில் தன் இன்னுயிரை மாய்த்தவர் மாணவி அனிதா. மூன்றாம் வகுப்பு படிக்கும்போது அவளது தாய் இறந்து விட்டார். அவளுக்குச் சரியான மருத்துவச் சிகிச்சை கிடைக்காத காரணத்தால்தான் தன் தாய் இறந்து விட்டார் என்பதை அறிந்த சிறுமி அனிதா தான் படித்து எதிர்காலத்தில் ஒரு மருத்துவராகி ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் முயன்று படித்து அதிக மதிப்பெண்கள் பெற்றும் அரசின் அடாவடித்தனத்தினால் மருத்துவராகும் வாய்ப்பை இழந்து விட்டாள்.

சூழ்நிலையே மனிதனை உருவாக்குகிறது. நல்ல சூழ்நிலையில் வளரும் பிள்ளைகள் நல்லவர்களாக, எதிர்காலத்தில் பெற்றோருக்கே முழுபொறுப்பும் உள்ளது. ‘நல்ல கனிதரும் கெட்ட மரமும் இல்லை. கெட்ட கனி தரும் நல்ல மரமும் இல்லை. ஒவ்வொரு மரமும் அதனதன் கனியாலேயே அறியப்படும். இவ்வாறு ஆண்டவர் இயேசு அறிவுறுத்தியுள்ளார். சிந்திப்போம்.

**வி. மரிய லீமாரோஸ்**
வில்லியனூர் மாதா அன்பியம்

## அனைத்துப் புனிதர்கள் தினம்

**அ**னைத்துப் புனிதர்கள் தினம் இன்று,
**ஆ**ண்டவரின் ஆசீர் பெற்றவர் தினம் இன்று,
**இ**றை சித்தத்தை வாழ்வாக்கியவர் தினம் இன்று,
**ஈ**கையால் இல்லாமை போக்கியவர் தினம் இன்று,
**உ**ண்மைக்காக உயிர் விட்டவர் தினம் இன்று,
**ஊ**மைகளைப் பேச வைத்தவர் தினம் இன்று,
**எ**ல்லோரும் நலமுடன் வாழ நினைத்தவர் தினம் இன்று,
**ஏ**ற்றத்தாழ்வுகள் அகற்ற முற்பட்டவர் தினம் இன்று,
**ஐ**யன் இயேசுவின் சீடர் தினம் இன்று,
**ஒ**ப்பந்தத்தால் சமத்துவம் தந்தவர் தினம் இன்று,
**ஓ**தல் மூலம் இறை வளர்த்தவர் தினம் இன்று,
**ஔ**டதமாய் வாழ்ந்த புனிதர் தினம் இன்று,

## அனைத்து ஆன்மாக்கள் தினம்

**அ**ன்று நம்மோடு வாழ்ந்தவர்கள்
**ஆ**ன்மாக்களாக இன்று,
**இ**றைவனடி சேர்ந்தோரை நினைவு கூறும் நாள்
**ஈ**மக்கடன் செய்வதோடு நிறைவு பெறவில்லை நம்பணி
**உ**த்தரிக்க நிலையில் இருக்கும் நம் முன்னோருக்கு
**ஊ**ழ்வினைப் போக்க
**எ**ல்லாரும் சேர்ந்து செபிப்போம்,
**ஏ**க்கங்கள் நீங்கி, அவர்கள் இயேசுவை அடையட்டும்,
**ஐ**க்கியம் அடையட்டும் இறைவீட்டில்,
**ஒ**ய்யாரத்தில் நம் முன்னோர் இருக்க,
**ஓ**துவோம் செபத்தை அவருக்காக, நம் செபமே
**ஔ**டதம் நம் முன்னோருக்கு

**லா. அருண் லாரன்ஸ்**, தூய மிக்கேல் அன்பியம்

### விலங்கு பற்றிய பொது அறிவு

1. மிக நீண்ட ஆயுளையுடைய விலங்கு எது? *ஆமை*
2. எந்த கொசு இனம் மனிதனைக் கடிக்கிறது? *பெண் கொசு*
3. பூனைக் குடும்பத்தில் மிக அழகான இனம் எது? *பனி சிறுத்தை*
4. மிக தடிப்பான சருமம் கொண்ட விலங்கு எது? *திமிங்கல சுறா*
5. உணவைக் கழுவி சாப்பிடும் விலங்கு எது? *ரக்கூன்*

**ஜோ. ரெனில்டா**, தூய பூண்டி மாதா அன்பியம்

# இது ஒரு கழுகின் கதை

கழுகு 70 வருடம் வாழ முடியும். ஆனால் அந்த வயதை எட்டுவதற்கு அந்த கழுகு கடினமான தீர்மானம் எடுக்க வேண்டும். கழுகின் 40 ஆவது வயதில் அதன் அலகு இறையை கொத்தும் பெலனை இழந்து விடுகிறது. கழுகின் நீளமும் கூர்மையானதுமான அலகு வளைந்து விடுகிறது. கழுகின் இறகுகள் அடர்த்தியாகவும் கனமாகவும் மாறி விடுகிறது. அப்படிப்பட்ட இறகுகள் அதன் மார்பில் ஒட்டிக்கொள்வதால் பறப்பதற்கு கடினமாகிறது. இப்பொழுது கழுகு "சாக வேண்டும்" அல்லது "உரு மாற்றத்திற்காக வேதனையான செயல்முறைக்குள் கடந்து" செல்ல வேண்டும். பின்பு கழுகு தன் அலகை பாறையில் உரச வேண்டும். கழுகு புதிய அலகு வரும் வரை காத்திருக்க வேண்டும். அதன் பின்பு அதன் கால்களில் உள்ள நகங்களை கொத்தி எடுக்க வேண்டும். புதிய நகம் வளர்ந்தவுடன் கழுகு தன்னுடைய வயதான இறகுகளை பிடுங்க ஆரம்பிக்கிறது. வேதனை சகிப்பதை பொறுத்தே மாற்றம் அமையும். அதன் பின்பு கழுகு இப்பொழுது ஒரு புதுப் பிறவியாக மாறுகிறது. அதன் பின்பு 30 ஆண்டுகள் வாழ்கிறது. ஏன் கழுகு இத்தனை வேதனை வழியாய் தன் மாற்றத்தை அடைய வேண்டும்? தொடர்ந்து வாழ நாமும் இந்த மாற்றத்திற்கான வழிமுறையில் செல்வது மிகவும் அவசியமாய் இருக்கிறது. இந்த கழுகை போல நாமும் கசப்பான நினைவுகள் தவறான பழக்கங்கள் மனதில் வைத்திருக்கும் கருத்துக்கள் இவைகளை பிடுங்கி எறிய வேண்டும். பழைய பாரங்களைத் தூக்கி எறிந்தால் மட்டுமே புதிய வாழ்க்கைக்குள் செல்ல முடியும்.

Annie Thibakar
பூண்டிமாதா அன்பியம்

## சாட்சி

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!! மரியே வாழ்க!!!

எனது தம்பியும் அவன் மனைவியும் சிறு கருத்து வேறுபாட்டால் பிரிந்து இருந்தார்கள். நான் அவர்களுக்காக ஒவ்வொரு நாளும் மாதாவிடமும், இறை இரக்க ஆண்டவரிடமும் மன்றாடினேன். அவர்கள் இருவரும் சேர்ந்தால் மாதா மலரில் சாட்சி எழுதுவதாக வேண்டினேன். இப்பொழுது இருவரும் சேர்ந்து நன்றாக இருக்கிறார்கள் என் மன்றாட்டைக் கேட்ட பரலோக மாதாவிற்கும் இறை இரக்க ஆண்டவருக்கும் கோடான கோடி நன்றிகள்.

**மாதாவின் மகள்**
இயேசுவின் திரு இருதய அன்பியம்

சுழல் விளக்கு-24

# வாழும் வழிமுறைகள்...

இறைவன் நமக்கு கொடுத்திருக்கும் கொடைகளில் மிகவும் அருமையானதும் மதிப்புள்ளதும் நண்பர்கள் ஆகும். நண்பர்கள் நமது வாழ்வில் மிகவும் முக்கியமானவர்கள். நம்முடைய சுக துக்கங்களை மனம்விட்டுப் பேசி, சில நேரங்களில் நமது மனப்பாரத்தை இறக்கி வைக்கும் சுமைதாங்கிகளாக அவர்கள் விளங்குகின்றனர். நம்முடைய சொந்த பந்தங்களிடம், ஏன் துணையிடம் கூட பகிர்ந்து கொள்ள முடியாத, விரும்பாத விசயங்களை நண்பர்களோடு அல்லது தோழிகளோடு பகிர்ந்து கொள்கிறோம். எனவே நண்பர்களைப் பொறுத்தமட்டில் நட்பு தொடரவும் நீடிக்கவும் நம்மிடம் நல்ல மனப்பக்குவம் தேவை. ஏனெனில் **நட்பும் கண்ணாடியும் ஒன்று. கவனமாகக் கையாளாவிட்டால் நொறுங்கிப் போகும்.**

நாளுக்கு நாள் மருத்துவ உலகில் முன்னேற்றம் ஏற்பட்டுத்தான் வருகிறது. புதிய மருந்துகள் கண்டுபிடிக்கப்படும் வேகத்தை மிஞ்சி, புதுப்புது நோய்களும் முளைக்கின்றன. ஒரு காலத்தில் உடம்பின் அத்தனை நோய்களுக்கும் ஒரே மருத்துவரைத் தேடிச் சென்ற நிலைமை மாறி, இன்று கண்ணுக்கு ஒருவர், பல்லுக்கு ஒருவர், காலுக்கு ஒருவர் என்று ஒவ்வொரு உடல் உறுப்புக்கும் என்று தனித்தனி மருத்துவமனைகளின் படி ஏற வேண்டி உள்ளது. இப்படி நோய்கள் மலிவதற்குக் காரணம் நமது வாழ்க்கை முறை மாற்றமே என்று மருத்துவ உலகமே ஒத்துக்கொண்டுள்ளது. அப்படியானால் நோய்கள் நுழையவிடாமல் முன் கூட்டியே தடுக்கும் மார்க்கம் உண்டா என்று கேட்டால் உண்டு என்கிறது உளவியல். ஆம் **மிதமான உணவு, மனமகிழ்ச்சி மற்றும் போதிய ஓய்வு ஆகியவை நம் உடம்பில் நோய் நுழையாமல் தடுத்துவிடும்.** மனித வாழ்க்கை என்பது பல பருவங்களைக் கொண்டது. ஆயினும் சுருக்கமாகச் சொல்வது என்றால் வாழ்வு என்பது முற்பகுதி, பிற்பகுதி என்று இரண்டு பிரதானமான பகுதிகள் கொண்டது. இன்றைய கணிப்பு படி மனிதர்களின் சராசரி ஆயுட்காலம் எழுபது ஆண்டுகள் என்று கூறப்படுகிறது. அந்த அடிப்படையில் முப்பத்தி ஐந்து வயதுக்கு உட்பட்ட பருவத்தை வாழ்வின் முற்பகுதி என்றும் அதற்கு பிந்திய காலகட்டத்தை வாழ்வின் பிற்பகுதி என்றும் கொள்ளலாம். முற்பகுதிப்பருவம் வேகம் நிறைந்தது. பிற்பகுதிப் பருவம் விவேகம் நிறைந்த பகுதி. இந்த இரு பகுதிகளின் வெற்றிக்கும் வெவ்வேறு காரணிகள், மனநூல் அறிஞர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. ஆம்

**வாழ்க்கையின் முற்பகுதியில் வெற்றி பெறத் தேவை சுறுசுறுப்பும் ஊக்கமும். பிற்பகுதியின் வெற்றிக்குத் தேவை பொறுமையும் நிதானமும்.**

வெற்றி என்று சொல்லும்போது வாழ்வில் வெற்றி பெறும் தருணங்களில்தான் மிகவும் கவனமுடன் நடக்க வேண்டும். நம்மில் பலர் வாழ்வில் வெற்றி அடைந்ததும் மிகவும் மதர்ப்போடும் ஆணவத்தோடும் நடந்து கொள்ள முற்படுகிறோம். அந்தஸ்தில் உயர்ந்ததும் அடுத்தவர்களைப் பார்க்கும் கோணம் மாறுகிறது. நமக்கென்ன என்கிற தலைக்கனம் ஏறி தடுமாற்றம் ஏற்படுகிறது. மற்றவர்களை மதிக்கும் மனோபாவம் மாறிப்போகிறது. எல்லோரையும் ஏளனமாகவும் இளக்காரமாகவும் பார்க்கும் மனநிலை வந்துவிடுகிறது. இந்த நினைப்பு வராமல் தடுக்க உளநூல் நிபுணர்கள் ஒரு எச்சரிக்கையை நம்முன் நிறுத்துகிறார்கள். ஆம் **வாழ்க்கையில் மேலே ஏறியதும் மற்றவர்களை ஏளனமாக பார்க்காதீர்கள். ஏனெனில் கீழே இறங்கும்போது அவர்களை மறுபடியும் சந்திக்க நேரிடும்.**

**குயில்**

*மீண்டும் சுழலும்*

## கடமை தவறாமை

கண் இமைக்கும் நேரத்தில்
காணாமல் போகின்றன மணித்துளிகள்.
கரைவது மணித்துளிகள் மட்டுமல்ல
கடமை உணர்வுகளும் தான்.
கடமைகளைக் கண்டிப்புடன் செய்,
கடவுளும் உன் பக்கத்தில்.
காலையிலே மாணவர்களுக்கு கல்வியைக் கொடு
கல்விக்கு அதிபதியும் உனக்கு அடிமையாவான்.
களைந்திருக்கும் கூந்தலுக்கு ஏது அழகு
சிதறிடும் உன் சிந்தையைச் செம்மையாக்கி
காலையில் கண்விழித்து மாலையில்
காற்றாய் போகும் இந்த நேரத்தில்
நீ என்ன செய்தாய் சிந்தனை செய்
வரும் காலம் உன்னை வணங்க வேண்டும்.
வானத்து நட்சத்திரமாக நீ வலம் வரவேண்டும்.
வாழ்த்துக்கள் அனைத்தையும் நீ பெற வேண்டும்.
உண்மையாய் உழைத்திடு உலகம் உன் காலடியில்.

**பெனி லெசி, சவேரியார் அன்பியம்**

# அன்னை மரியின் அற்புதச் சேனை

**1. கொன்சீலியம்:**

உலகம் முழுவதிலும் உள்ள சேனையை ஆண்டு நடத்தும் மைய நிர்வாக சபை கொன்சீலியம் என்று அழைக்கப்படும்.

1. திருச்சபையின் அதிகாரத்திற்கு பணிந்து, சேனை சட்டங்களை இயற்றவும், மாற்றவும், விளக்கவும் இந்த தலைமை நிர்வாக சபைக்கு மட்டுமே உரிமை உண்டு. எந்த இடத்திலும் தனக்கு கீழ்ப்பட்ட நிர்வாக சபைகளையும், பிரசீடியங்களையும் நிறுவவும், கலைக்கவும், ஒவ்வொரு செயலைப்பற்றியும் சேனையின் கொள்கையை தீர்மானிக்கவும், தகராறுகளையும், முறையீடுகளையும் கேட்டுத் தீர்ப்புக் கூறவும், உறுப்பினர்களின் உரிமைகள் பற்றிய பிரச்சனைகளைத் தீர்க்கவும், வேலைகளின் பொருத்தத்தையும், அவற்றைச் செய்யும் முறைகளையும் கேட்டு, தீர்ப்பு கூறவும் கொன்சீலியத்திற்கு மட்டுமே உரிமை உண்டு.

2. கொன்சீலியம் மாதந்தோறும் அயர்லாந்து நாட்டில் உள்ள டப்ளின் நகரில் கூடும்.

3. கொன்சீலியம் தன் பொறுப்புகளுள் சிலவற்றை தனக்கு கீழ் உள்ள நிர்வாக சபைகளிடமோ, குறிப்பிட்ட பிரசீடியங்களிடமோ ஒப்படைக்கலாம். இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை கூட்டவோ, குறைக்கவோ எந்த சமயத்திலும் அதற்கு உரிமை உண்டு.

4. கொன்சீலியம் தனக்குரிய பொறுப்புகளுடன், ஒரு கீழ் நிர்வாக சபையின் அல்லது பல கீழ் நிர்வாக சபைகளின் பொறுப்புகளையும் ஏற்றுக் கொள்ளலாம்.

5. கொன்சீலியத்துடன் நேரடியாக இணைக்கப்பட்ட அனைத்து சேனை அமைப்புகளின் அலுவலர்களும் கொன்சீலியத்தின் உறுப்பினர் ஆவர். டப்ளின் உயர் மறைமாவட்டத்திலுள்ள அனைத்து முதியோர் கியூரியா அலுவலர்களும் கொன்சீலியக் கூட்டத்திற்கு கட்டாயம் வருகை தரவேண்டும். தொலைவு காரணமாக, எண்ணிக்கையில் மிகுந்த சேனை அமைப்புகளின் அலுவலர்கள் தவறாமல் வருகை தருவது முடியாது. டப்ளின் கியூரியாக்களின் பிரதி நிதித்துவத்தை மாற்றி அமைக்க கொன்சீலியம் அதிகாரம் பெற்றிருக்கிறது.

6. கொன்சீலியத்தின் ஆன்ம இயக்குநர் அயர்லாந்து நாட்டின் திருச்சபை அதிகாரிகளால் நியமிக்கப்படுவர்.

7. கொன்சீலியத்துடன் நேரடியாக இணைக்கப்பட்ட நிர்வாக சபைகளின் அலுவலர்களின் தேர்வு, கொன்சீலியத்தின் அங்கிகாரத்திற்கு உட்பட்டது.

8. தூர இடங்களில் உள்ள நிர்வாக சபைகளை மேற்பார்வையிட

கொன்சீலியம் கடிதத் தொடர்பாளர்களை நியமிக்கிறது. இந்தக் கடிதத் தொடர்பாளர்கள் அந்த நிர்வாக சபைகளுடன் தொடர்பு கொண்டு அதன்மூலம் நிர்வாக சபைகள் அனுப்பும் மாதாந்திரக் கூட்ட அறிக்கைகளிலிருந்தும் வேலை அறிக்கைகளிலிருந்தும், அறிக்கை தயாரித்து கொன்சீலியக் கூட்டங்களில் சமர்ப்பிக்க வேண்டும். கடிதத் தொடர்பாளர் கொன்சீலியக் கூட்டங்களுக்கு வருகை தருவார். ஆனால் அவர் கொன்சீலியத்தின் உறுப்பினராக இல்லாதிருந்தால் அவருக்கு வாக்குரிமை கிடையாது.

9. கொன்சீலியத்திடமிருந்து முறைப்படி அதிகாரம் பெற்ற பிரதி நிதிகள், சேனைக்குரிய எந்த வட்டாரத்திற்கும் சென்று அங்குள்ள சேனைச் சங்கங்களைப் பார்வையிடலாம். சேனையின் வளர்ச்சியை ஊக்குவிக்கலாம். கொன்சீலியம் வழக்கமாகச் செய்யும் அலுவல்களைச் செய்யலாம்.

10. சேனையின் சட்ட திட்டங்களுக்கும், ஒழுங்கு முறைகளுக்கும் கட்டுப்பட்டு, சேனைக் கைநூலை திருத்தி அமைக்கும் உரிமை கொன்சீலியத்திற்கு மட்டுமே உண்டு.

11. பெரும்பான்மையான சேனைச் சங்கங்களின் அனுமதியின்றி, சேனையின் ஒழுங்குகளை மாற்றலாகாது. ஏதேனும் ஓர் ஒழுங்கை மாற்ற வேண்டியிருந்தால் அதைப்பற்றி சேனைச் சங்கங்களுக்கு தங்கள் நிர்வாக சபைகள் மூலமாக அறிவித்து, கருத்தை தெரிவிக்க அவற்றிற்கு போதிய அவகாசம் கொடுக்க வேண்டும். சேனைச் சங்கங்கள் கொன்சீலியத்திலுள்ள தங்கள் பிரதிநிதிகள் மூலம் அல்லது கடிதம் வாயிலாகத் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கலாம்.

தொடர்வது சேனைப் பிரமாணிக்கம்

**லூயிஸ்**
தூய பவுல் அன்பியம்

---

## பொன்மொழிகள்

இதயம் சொல்வதையே செய்; வெற்றியோ தோல்வியோ அதைத் தாங்கும் சக்தி அதற்கு மட்டும் தான் உண்டு. –விவேகானந்தர்

வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டுமானால் நல்ல நண்பர்கள் தேவை; வாழ்நாள் முழுவதும் வெற்றிபெற வேண்டுமானால் ஒரு எதிரியாவது தேவை. –அப்துல்கலாம்

தோல்வி உன்னைத் துரத்துகிறது என்றால், வெற்றியை நீ நெருங்குகிறாய் என்று அர்த்தம். –நெப்போலியன்

கோபம் என்பது பிறர் செய்யும் தவறுக்கு, உனக்கு நீயே கொடுத்துக்கொள்ளும் தண்டனை. –புத்தர்

**மோ. மெலினா விண்ணரசி**

# குழந்தைப் பருவம்
# (புனித அந்தோணியார்)

**முன்னுரை:**

"நேர்மையான குழந்தையின் தந்தை மிகவும் களிகூர்வார்; ஞானமுள்ள குழந்தையைப் பெற்ற தகப்பன் அவர் பொருட்டு மகிழ்ச்சி அடைவார்" (நீதி 23:24).

அந்தோணியார் 1195-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் நாள் போர்ச்சுக்கல் நாட்டின் தலைநகர் லிஸ்பனில் பிறந்தார். அந்தோணியாரின் தந்தை, மார்ட்தின் திபியோன் லிஸ்பன் நகரத்து ஆளுநர், நேர்மையானவர் தாய், தேவரா தெரசம்மாள். நற்குணங்கள் உடையவர். இவ்விருவருக்கும் மகனாய் உதித்தவர் தூய அந்தோணியார். இவருக்கு பெற்றோரிட்ட பெயர் பெர்தினாந்து.

**இவரது உடன் பிறப்புகள்:**

இவருக்கு இரண்டு சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் உண்டு. கடைசி சகோதரியான மரியம்மா இவரைப்போலவே துறவறம் பூண்டு கன்னிகையானவர். மற்ற மூவரும் இல்லறத்தில் நல்லறம் வாழ்வில் திகழ்ந்தவர்கள். "என் விருப்பத்தை நாடாமல் என்னை அனுப்பியவரின் விருப்பத்தையே நாடுகிறேன்" (யோவா 5:30). அந்தோணியாரின் பேச்சு வன்மையையும், ஞானத்தையும் மறையியல் அறிவையும், தவ ஒழுக்கத்தையும் பின்பற்றியவர்.

**குழந்தைப் பருவம்:**

குழந்தைப் பருவத்திலிருந்தே இவரது தாய் இவருக்கு தாய்ப்பாலோடு ஞானப்பாலையும் ஊட்டி வந்தார். "ஓ மகிமை பொருந்திய அன்னை மரியாவின் பாடலை தாலாட்டுப் பாடலாக பாடிவந்தார் இவரது தாய். வயதில் வளர வளர பக்தியிலும் ஞானத்திலும் வளர்ந்து வந்தார். அதன்பின் ஐந்து வயது நிரம்பியதும் பள்ளியில் சேர்க்கப்பட்டார். படிப்பிலும், ஆன்மீகக் காரியங்களிலும் நாட்டம் கொண்டவராய் விளங்கியவர். தவறாமல் ஆலயத்திற்குச் செல்வார். இறைவனைப் போற்றுவார். பீடச் சிறுவனாகப் பணிபுரிவதிலும் ஆர்வம் கொண்டவர். திருப்பலியில் எப்போதும் செபிப்பதில் நேரத்தை செலவளித்தார்.

**துறவறத்தில் அந்தோணியார்:**

அந்தோணியார் பதினைந்து வயது நடக்கும்போது ஆலயத்தில் மிகுந்த பக்தியுடன் தியானம் செய்து கொண்டிருந்தார். அலகை அவருடைய தியானத்தைக் கெடுக்க எண்ணியது. கரிய நிறத்தில் கோர உருவமுடன் அவருக்கு முன் தோன்றி அவரை சோதிக்கச் செய்தது. சிறிது அச்சம் அவரை ஆட்கொண்டாலும் இறைநம்பிக்கை கொண்டார். பிறகு முழந்தாள் படியிட்டு விசுவாசத்துடன் வெற்றியின் அடையாளமான சிலுவை அடையாளத்தை

கையால் வரைந்தார். இந்த அடையாளம் கல்லில் உளியால் செதுக்கியதுபோல பதிந்து காணப்பட்டது. அந்த அலகை அலறி அடித்து ஓட்டம் பிடித்தது. சிலுவை அடையாளத்தின் மகிமை உணர்ந்திருந்தார் அந்தோணியார். புதுமையுள்ள அந்தோணியார் இறை வல்லமையால் நிரப்பப் பெற்றவர். இதுவே முதல் சாட்சியாக விளங்குகிறது. துறவியாக வாழ தீர்மானித்தார். லிஸ்பனிலுள்ள வின்செந்தே என்ற தூய அகுஸ்தீனார் குருமடத்தில் துறவியாக சேர்ந்தார். அதே ஊரில் இருந்தமையால் உறவினர் நண்பர் ஆகியோர் அடிக்கடி அவரைப் பார்க்க வந்தனர். துறவு வாழக்கைக்கு இடையூறாக இருப்பதாக உணர்ந்தார். அவர்களை இங்கு வரவேண்டாம் என்று சொல்லிவிட்டார். பிறகு இவரது இரக்கமனம் இடம் கொடுக்கவில்லை. இதனால் தொலைவிலுள்ள கோயிம்பரா நகரிலுள்ள திருச்சிலுவை குருமடத்துக்குச் சென்றார். தன் கவனத்தையெல்லாம் கல்வியிலும் ஆன்மீக முன்னேற்றத்திலும் செலவளித்தார். துறவற இல்ல கடமைகளைச் செய்வதும், பக்தியிலும் மற்ற துறவிகளைவிட சிறந்து முன்மாதிரியாய் திகழ்ந்தார். "உங்களை அழைக்கும் அவர் நம்பிக்கைக்குரியவர். அவர் இதைச் செய்வார்" (1தெச 5:24).

**குழந்தை இயேசுவை ஏந்திய கரங்கள்:**

ஓர் இரவு புனிதர் தனியறையில் வெகு நேரம் கண்விழித்து செபித்துக் கொண்டிருந்தார். திடீரென ஒரு பேரொளி அந்த அறையை நிரப்பியது. குழந்தை இயேசு அழகும் அருளும் கொண்ட வடிவில் அங்கே தோன்றினார். இனிமையான இதமான சூழ்நிலை அங்கே இருந்தது. புனிதர் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினார். குழந்தை இயேசுவை தனது மார்போடு சேர்த்து அரவணைத்தார்; முத்தமிட்டார். குழந்தை இயேசுவும் புனிதரை அணைத்து முத்தமிட்டார். புனிதர் பேரானந்த நிலையில் மெய்மறந்து நின்றார். குழந்தை இயேசுவைக் கையில் ஏந்தி விளையாடி மகிழ்ந்தார். "அஞ்சாதே, நான் உன்னை மீட்டுக் கொண்டேன். உன் பெயரைச் சொல்லி உன்னை அழைத்தேன்; நீ எனக்கு உரியவன்" (எசாயா 43:1).

**முடிவுரை:**

"ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர்; பார்வையற்றோர் பார்வை பெறுவர்; ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும்..." (லூக் 4:18). புனிதரின் ஆன்மாவில் கடவுள் தமக்கென ஒரு ஆலயம் அமைத்துள்ளார். இது புனிதருக்கு கிடைத்துள்ள மாபெரும் பேறு கடவுள் வாழும்படியாக அழகியதொரு ஆலயம் நம்முள் கட்டுவோம். "ஆண்டவரே உம் பாதைகளை நான் அறியச் செய்தருளும். உம் வழிகளை எனக்குக் கற்பித்தருளும்" (திபா 25:4). "குழந்தை இயேசுவை கையில் ஏந்தியவரான தூய அந்தோணியாரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

**மேரி ஆண்டனி செலின்**
தூய வளன் அன்பியம்

# பயன்படுத்துவோம்! கல் உப்பு...!

"உங்கள் உப்பில் அயோடின் உள்ளதா? எங்கள் டேபிள் சால்ட் அயோடின் நிறைந்தது. இதுதான் தேசத்தின் உப்பு" ஒவ்வொரு தொலைக்காட்சி அலைவரிசையிலும் பெரிய பெரிய சமையல் ஹீரோக்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட உப்புத்தூள் விளம்பரங்கள் நமது மூளையை மழுங்கடித்து விட்டன. இதனால் கல்லுப்பின் பயன்பாடு அறவே நின்று விட்டது. நம் பாட்டனும் பூட்டனும் கல் உப்பைத் தானே பயன்படுத்தினார்கள். நோய் நொடியின்றிதானே வாழ்ந்தார்கள். நாம் வாங்கும் பொடி உப்பு படு வெள்ளையாக இருப்பதற்காக அலுமினியம் சார்ந்த ஒரு வேதிப்பொருளை அதில் கலக்குகிறார்கள். அது சிவப்பு கம்பளம் விரித்து புற்றுநோயை வரவேற்கும்.

2020-ல் இந்தியாவை வளர்ந்த நாடாக்க வேண்டும் என அப்துல்கலாம் முயற்சி மேற்கொண்டார். ஆனால் மேலைநாட்டு மருந்து முதலாளிகள் நம் நாட்டை நோயாளிகள் நிறைந்த ஒரு தளர்ந்த நாடாக்க வேண்டும் என்பதில் குறியாக உள்ளார்கள். அதற்கு அவர்கள் கையில் எடுத்துக்கொண்ட ஆயுதம் தான் இந்த அயோடின் உப்பு. ஒரு முப்பது ஆண்டுகளுக்கு முன் பள்ளியில் படிக்கும் சிறுவர்கள் பார்ப்பதற்கு ஒல்லியாக அழகாக இருப்பார்கள்.

இப்போதுள்ள குழந்தைகள் தொப்பையுடன் காணப்படுவதற்குக் காரணம் இந்த பொடி உப்பு கலந்த தின்பண்டங்களைத் தின்றதுதான். போதாக் குறைக்கு நம் இல்லத்தரசிகளும் சமையலுக்கு இந்த நச்சு உப்பைத்தான் பயன்படுத்துகிறார்கள். கடலுக்கு அருகில் இருக்கும் உப்பளங்கள் மூலம் இயற்கையாகக் கிடைக்கும் கல்லுப்பில் உடலுக்குத் தேவையான அனைத்து தாது உப்புகளும் சரியான விகிதத்தில் உள்ளன. இந்த கல்லுப்பை அப்படியே பயன்படுத்திய பழைய தலைமுறையினருக்கு இதய நோய் வந்ததா? சர்க்கரை நோய் வந்ததா? உடல் பருமன் நோய் என்பது அவர்கள் அறியாத ஒன்று. பொடி உப்பு பயன்படுத்துவதால் மக்கள் நலம் குழிதோண்டி புதைக்கப்படுகிறது.

போதிய விழிப்புணர்வு இல்லாததால் பணக்கார நோய்களும் ஏழைகளாலும், நடுத்தட்டு மக்களாலும் விலைகொடுத்து வாங்கப்படுகிறது. எனவே கல் உப்பைப் பயன்படுத்தி சர்க்கரை நோய், இதய நோய், உடல் பருமன் போன்ற நோய்களிலிருந்து விடுதலை பெறுவோம்.

பொடி உப்பு பயன்படுத்த வேண்டிய சூழ்நிலைகளில் இந்துப்பு (இமயமலையின் அடிவாரத்தில் உள்ள கடற்கரை படுகைகளில் இருந்து வெட்டி எடுக்கப்படுவது) பயன்படுத்தி வரலாம். இந்துப்பு அதிக மருத்துவ பயன்மிக்கது. நோய்கள் வராமல் காக்க வல்லது.

**ரேகா மகிழன்**
பாத்திமா அன்னை அன்பியம்

# உலக பொது அறிவு

| | | |
|---|---|---|
| 1. | முதன்முதலில் தேசிய கீதத்தை உருவாக்கிய நாடு | **ஜப்பான்** |
| 2. | கிரிக்கெட் விளையாட்டு இந்தியாவில் அறிமுகமான ஆண்டு | **18 ம் நூற்றாண்டு** |
| 3. | சாஃப்ட் பால் விளையாட்டைக் கண்டுபிடித்த நாடு | **அமெரிக்கா** |
| 4. | இந்தியாவின் முதல் அணு உலையின் பெயர் | **அப்சரா** |
| 5. | விம்பிள்டனில் விளையாடிய முதல் இந்தியர் | **சர்தார் நிஹால் சிங்** |
| 6. | கவியரசர் தாகூர் ஆங்கிலத்தில் எழுதிய முதல் கவிதை | **தி சைல்டு** |
| 7. | கடல் அலை மூலம் முதன்முதலில் மின்சாரம் தயாரித்த நாடு | **பிரான்ஸ்** |
| 8. | முதன்முதலில் நாடக அரங்கத்தை அமைத்தவர்கள் | **கிரேக்கர்கள்** |
| 9. | புனைபெயர் சூட்டும் பழக்கம் தோன்றிய நாடு | **சீனா** |
| 10. | குடியரசுத் தலைவர் பதவிக்காக போட்டியிட்ட முதல் பெண் | **லட்சுமி ஷைகல்** |
| 11. | இந்தியாவின் முதல் பேருந்து நடத்துனர் | **பக்கீர் முகமது பாபா (1925)** |
| 12. | செயற்கை இதயம் கண்டுபிடித்தவர் | **வில்லியம் கால்ப்** |
| 13. | செயற்கை கால் கண்டுபிடித்தவர். | **அம்ப்ரோஸ்பேர்** |
| 14. | செயற்கை சிறுநீரகம் கண்டுபிடித்தவர் | **வில்லியம் கால்ப்** |
| 15. | செயற்கை கதிரியக்கம் கண்டுபிடித்தவர் | **ஹென்றி பெக்கொரல்** |
| 16. | செயற்கை இரத்த செல்கள் கண்டுபிடித்தவர் | **சாமிர் மித்ரா கோத்திரி** |
| 17. | செயற்கை நிறம் கண்டுபிடித்தவர் | **வில்லிம் பெர்கின்** |
| 18. | செயற்கை வைரம் கண்டுபிடித்தவர் | **மூவாசன்** |
| 19. | தந்திக்கருவியை முதன்முதலில் கண்டறிந்தவர் | **மோர்ஸ்** |
| 20. | மின்விளக்கைக் கண்டறிந்தவர் | **தாமஸ் ஆல்வா எடிசன் (1878)** |
| 21. | அணுகுண்டைக் கண்டறிந்தவர் | **ஜெ.ராபார்ட் ஓபன்ஹமர் (1945)** |
| 22. | கால்சியத்தைக் கண்டுபிடித்தவர் | **ஹெச் டேவி (1808)** |
| 23. | இசைத்தட்டைக் கண்டறிந்தவர் | **பிட்டர் கோல மார்க் (1948)** |
| 24. | சுருக்கெழுத்து முறையைக் கண்டுபிடித்தவர் | **பிட்மான் (1837)** |
| 25. | ஆம்புலன்ஸ் உருவாக்கியவர் | **லாரிடாமினிக் ஜின்** |
| 26. | வாயு நிரப்பப்பட்ட தெர்மா மீட்டரைக் கண்டுபிடித்தவர் | **கலிலியோ** |
| 27. | பிரஷர் குக்கரைக் கண்டுபிடித்தவர் | **டெனிஸ் பாபின்** |
| 28. | ஜீன்ஸ் துணிகளைக் கண்டுபிடித்தவர் | **லெவிஸ்டராஸ் (1902)** |
| 29. | செல்போனைக் கண்டுபிடித்தவர் | **ஜெ. பிராண்டென் பெர்கர்** |

**ர. சகாய அனிதா**
திருக்குடும்ப நடுநிலைப் பள்ளி

# அன்பிய பொறுப்பாளர்கள் ஒருங்கிணைப்புக் கூட்டம்

அன்பிய பொறுப்பாளர்களுக்கான ஒருங்கிணைப்புக் கூட்டம் 15.10.2017 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு பங்குத்தந்தையர்கள் தலைமையில் நடைபெற்றது. குழு ஆய்விற்காக அன்பியப் பொறுப்பாளர்கள் 9 மண்டலங்களாக பிரிக்கப்பட்டார்கள். குழு ஆய்வின் வினாக்களாக:

I. விவிலிய மாதத்தை எவ்வாறு சிறப்பித்தோம்?

1. விவிலிய வாரம் வழிபாடுகள்
2. விவிலிய போட்டிகள்
3. விவிலிய கண்காட்சிகள்
4. விவிலிய நாடகம் பற்றிய திறனாய்வு

II. செபமாலை மாதத்தை எவ்வாறு சிறப்பிக்கலாம்?
குறிப்பாக காட்சிமாதா திருவிழா அக்டோபர் 31 ம் தேதி அமலிவனம் செபமாலைப் பவனி

III. நவம்பர் மாத நிகழ்வுகள் திறனாய்வு மரித்தோர் நினைவு, குழந்தைகள் தினவிழா

**1. குழு ஆய்வின் பொதுவான கருத்துக்கள்:**

* விவிலிய வார வழிபாடுகள் மிகச்சிறப்பாகவும், பக்தியாகவும் அமைந்தது.

  அந்தந்த நாளுக்குரிய கருத்துக்கேற்ப முன்னுரை, வாசகங்கள், மன்றாட்டுக்கள் எல்லாம் நன்றாக இருந்தன. அனைத்து பக்த சபைகளும் நன்றாக சிறப்பித்தார்கள். அதிகம் பேர் பங்கெடுத்தார்கள். நன்றாக பயிற்சி எடுத்து வாசித்தது நன்றாக இருந்தது.

* விவிலிய மாதம் முடிவில் இறைவார்த்தையை இனிப்போடு வழங்கியது சிறப்பாக இருந்தது.
* விவிலியப் போட்டிகள் சிறப்பாக நடைபெற்றன.
* ஒவ்வொரு பிரிவாக பல்வேறு போட்டிகள் நடத்தியது நன்றாக இருந்தது. போட்டிகளில் அதிகம் பேர் பங்கெடுத்தார்கள்.
* பரிசுகள் அனைத்தும் அருமையாக இருந்தன.
* விவிலியக் கண்காட்சி மிகச்சிறப்பாக இருந்தது. அதைச் செய்ய வடிவம் கொடுத்த அருட்சகோதரிகள், ஆசிரியர்கள், பக்த சபையினர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். கண்காட்சியைப்பற்றி விளக்கம் அளித்த விதமும் நன்றாக இருந்தது. அனைவருக்கும் பாராட்டுக்கள்.

* விவிலிய நாடக விழா மிகச்சிறப்பாக இருந்தது. அனைத்து மண்டலங்களும் நன்றாக நாடகங்களை அரங்கேற்றினார்கள். நாடகத்தில் பெரியவர்களின் பங்கேற்பு அருமையாக இருந்தது. பங்கேற்ற அனைவருக்கும் பரிசுகள் வழங்கி சிறப்பித்தது பாராட்டுக்குரியது.
* காட்சி மாதா நவநாளின் முதல் நாளிலேயே பக்த சபைகளும், மண்டலமும் இணைந்து செபமாலைப்பவனி சிறப்பித்தது நன்றாக இருந்தது. சாமுவேல் மண்டலத்திலிருந்து செபமாலை சொல்ல நிறைய பேர் வந்திருந்தார்கள்.
* பங்குத்தந்தை அவர்கள் கூறியதுபோல் நல்ல மழை பெய்யும் படியாகவும், கொடிய நோய்கள் பரவாமலும் பாதித்தவர்கள் சுகம் பெறவும் அனைவரும் முழுமனதோடு செபிப்பது சிறப்பானது.
* காட்சி மாதா திருவிழாவின் போது மதியம் நடைபெறும் பரிகாரச் செபத்திலும் அனைவரும் பங்கெடுத்து செபிக்க வேண்டும்.
* அக்டோபர் 31 ஆம் தேதி அமலிவனம் நோக்கி செபமாலைப் பவனி சீக்கிரம் ஆரம்பித்தால் வசதியாக இருக்கும். எல்லா அன்பியக் குடும்பங்களும் கலந்து கொண்டு பவனியில் செபித்தால் சிறப்பாக இருக்கும்.
* குழந்தைகள் தினவிழா விளையாட்டுப் போட்டிகளை விடுமுறை நாளில் வைத்தால் அனைத்து குழந்தைகளும் கலந்து கொள்ள வசதியாக இருக்கும்.
* வகுப்பு வாரியாக விளையாட்டுபோட்டிகள் வைத்து பரிசு வழங்கினால் நன்றாக இருக்கும்.
* நவம்பர் 2 ஆம் தேதி கல்லறைத்தோட்டத்தில் மாலையில் நடக்கும் திருப்பலியில் பங்கெடுத்து இறந்த ஆன்மாக்களுக்காக செபிக்க வேண்டும்.
* நவம்பர் மாதம் முழுவதும் இறந்த ஆன்மாக்களுக்காகவும் யாரும் நினையாத ஆன்மாக்களுக்காகவும் தனியாகவும் குடும்பமாகவும் ஒப்புக்கொடுக்க வேண்டும். ஏழைகளுக்கு நம்மால் ஆன உதவிகளைச் செய்யலாம் என்று தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள்.

**பரிந்துரை:**

* எசாயா மண்டலத்தில் உள்ள அருளாளர் தேவசகாயம் அன்பியம், நிக்கோலஸ் அன்பியம் இரண்டையும் பங்குத்தந்தையவர்கள் பார்வையிட வரவேண்டும் என்று எசாயா மண்டலத்தார் பரிந்துரைத்தார்கள்.

**பின் பங்குத்தந்தையவர்கள் தன் உரையில்**

* விவிலிய நாடக விழாவில் மண்டலங்களின் நிறைவான செயல்பாட்டை விட அனைவரின் பங்கெடுப்பு மிக அருமை என்று பாராட்டினார்கள்.

* ஆமோஸ் மண்டலத்தில் பெரியவர்களின் பங்கேற்பு சிறப்பாக இருந்தது.
* ஒசாயா மண்டலம் இயற்கையை மையப்படுத்திய சிந்தனை மிகச்சிறப்பாக இருந்தது.
* விவிலிய கலை விழாவின்போது ஒரே பரிசு ஒரு நபருக்கு நிறைய கிடைத்திருந்தால் பங்குத்தந்தையிடம் திரும்ப கொடுத்தால் அதை மாற்றி வாங்கித்தருவதாகவும், குறிப்பிட்ட நாட்களுக்குள் தரும்படியாகவும் கேட்டுக்கொண்டார்கள்.
* மாதா காட்சி திருவிழாவின் நவநாளில் அனைவரும் இணைந்து செபமாலைப்பவனியில் செபிக்க வேண்டும் என்ற உடனேயே மழைத்துளிகள் விழுந்தன. எனவே எல்லோரும் எல்லா நாட்களும் குறிப்பிட்ட நேரத்தில் வந்து பவனியை சிறப்பிப்போம்.
* அக்டோபர் 31ம் தேதி செபமாலை மாதா மாத நிறைவு நாள் அன்று மாலை 5½ மணிக்கு செபமாலைப் பவனி நம் ஆலய வளாகத்திலிருந்து ஆரம்பித்து அமலிவனம் சென்று நற்கருணை ஆசீரோடு நிறைவு பெறும். அனைத்து மக்களும் கலந்து கொள்ள வேண்டும்.
* காட்சி அன்னை திருவிழா மாலை ஆராதனை 10 ம் திருவிழா திருப்பலியை பரிசுத்த பரலோக அன்னை அன்பியக்குடும்பங்கள் சிறப்பிப்பார்கள்.
* நவம்பர் மாதம் நம் மூதாதையர்களை நினைவு கூறக் கூடிய மாதம். நம் மரணத்தை அதிகமாக நினைக்கக் கூடிய மாதம். ஒவ்வொரு நாளும் தொடங்கும்போது நமக்கும் மரணத்திற்கும் இடையே உள்ள 1 நாள் குறைந்துவிட்டது என்ற சிந்தனை நமக்கு வரவேண்டும்.
* உத்தரிக்கிற நிலை ஆன்மாக்கள் நம் செபம், தபம், தர்மம் போன்ற நற்செயல்களால் தான் விண்ணேற்றம் அடைகிறார்கள் நமக்காக செபிக்கிறார்கள்.
* கல்லறைகள் அலங்கரிக்கப்பட இயற்கை பூக்களை பயன்படுத்துவோம்.
* மாதா மலரில் ஒரு குடும்பத்திற்கு 1 படைப்பு மட்டும் தருமாறு கேட்டுக் கொண்டார்கள்.
* பெரியவர்கள் விவிலிய மனப்பாடப் போட்டியில் பங்கெடுப்பு மிகக் குறைவு.
* குழந்தைகள் தின விழாவின் போது திருக்குறள் மனப்பாடப்போட்டி நடைபெறும். விவிலிய மாதத்தில் விவிலிய மனப்பாடப்போட்டி நடைபெறுவது போல குழந்தைகள் தின விழாவிலும் வகுப்பு வாரியாக மனப்பாடப்போட்டி நடத்தப்படும் என்று கூறினார்கள்.
* பின் உதவிப்பங்குத்தந்தையவர்கள் இயற்கை உணவு பற்றி விளக்கமும் அச்சிடப்பட்ட உணவுப் பட்டியலும் வழங்கினார்கள்.

தொகுப்பு: திருமதி. **ஜாய்ஸ் பெனடிக்ட்**

# பங்கு நிதிக்குழுவின் கூட்டம்

**15.10.2017 அன்று நடைபெற்ற கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்ட கருத்துக்களும், தீர்மானங்களும்.**

**சென்ற கூட்டத்தில் பேசி நிறைவு செய்யப்பட்ட செயல்பாடுகள்:**

* கடந்த கூட்டத்தில் உறுப்பினர்களின் கருத்துக்கு ஏற்ப பரிசுத்த திருக்குடும்ப மண்டபத்தின் தெற்குபுறத்தில் இரண்டு நுழைவு வாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. கீழ்தளத்திற்காக மேல்பக்கம் உள்ள நுழைவு வாயிலும், மேல்தளத்திற்காக கீழ்ப்பக்கம் உள்ள நுழைவு வாயிலும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். இரண்டு தளத்திலும், மண்டபத்தை உபயோகப்படுத்துகிறவர்களின் வசதிக்காக Store Rooms கட்டப்பட்டுள்ளன.
* திருவிழா நாட்களில் குறிப்பாக 8,9,10 நாட்களில் கழிவு நீர்த்தொட்டி விரைவில் நிரம்பி விடுவதை கருத்தில் கொண்டு மேற்கொண்டு இரண்டு தொட்டிகளில் கழிவுநீர் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
* மாதா அரங்கத்தின் கலை நிகழ்வு நடக்கவிருக்கும் நாட்களில் நிகழ்ச்சி நடத்துபவர்களின் வசதிக்காக அரங்கத்தின் அருகிலேயே கழிப்பறை வசதி செய்யப்பட்டுள்ளது.

**இம்மாதம் செயல்பட எடுத்த தீர்மானங்கள்:**

* அந்தோணியார் கோவில் பள்ளியில் அதன் கூரையை சரி செய்து நவீன முறையில் மாற்றி அமைக்க வேண்டும். மாணவர்களின் வசதிக்காக கழிப்பறை கட்டவும் தீர்மானம் செய்யப்பட்டுள்ளது.
* தூய தெரசாள் துவக்கப்பள்ளியில் முகப்பு வாயில் பழுது சரி செய்யவும், உள் பக்கம் படிக்கட்டு அமைத்திடவும் தீர்மானம் செய்யப்பட்டுள்ளது.
* தூய தெரசாள் மேல்நிலைப்பள்ளியில் திரு. பிரதாப் சிங் அவர்களின் உதவியுடன் கட்டிய கட்டிடத்தின் உட்பகுதியில் தரை ஓடுகள் பதிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.
* கல்லறைத் தோட்டத்தில் திருப்பலி நடக்கின்ற நாட்களில் வியாகுல மாதா கோவில் மண்டபத்தில் கேட்கின்ற அளவிற்கு மட்டும் ஒலி வாங்கி வசதியுடன் பெட்டி ஒலிபெருக்கி ஒன்று அமைத்து வசதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**பிரச்சனை**

பிரச்சனைகளும், நாய்களும் ஒன்றுதான்,
அவைகளுக்கு பயந்து ஓடினால் நம்மை விரட்டும்,
எதிர்த்து நின்றால் அவைகள் தெறித்து ஓடும்.

# வத்திக்கான் செய்திகள்

**1) இளையோருக்கு திருத்தந்தையின் செய்தி:**

நவீன சமுதாயத்தில் நிலவுகின்ற தன்னலப் போக்குகளிலிருந்து விடுபட்டு பிறருக்கு உதவுகின்ற மனப்பான்மையில் கவனம் செலுத்துமாறு பன்னாட்டு இளையோரிடம் கேட்டுக்கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

**2) வாழ்த்துச் செய்தி:**

நாம் அனைவரும் இவ்வுலகில் விருந்தினரே, நமது இவ்வுலகப் பயணம் நிறைவடைந்ததும், விண்ணகத்தில் உரிமைக் குடிமக்களாக வாழச் செல்வோம் என்று திருத்தந்தை வழங்கிய ஒரு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**3) திருத்தூதுப் பயணம்:**

இவ்வாண்டு நவம்பர் 30ம் தேதி முதல் டிசம்பர் 2ம் தேதி வரை பங்களாதேசத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மேற்கொள்ளவிருக்கும் திருத்தூதுப் பயணம் அங்கு நிலவிவரும் மத நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதாக அமையும் என்றார் அந்நாட்டுக் கர்தினால் பேட்ரிக் ரொசாரியோ.

**4) டுவிட்டர் செய்தி:**

நற்செய்தி மதிப்பீடுகளுக்கு நேர்மையானவர்களாக இருந்து, கிறிஸ்துவுக்கு சான்றுபகர உதவும்படியாக, தூய ஆவியானவரால் உயிர்த்துடிப்பூட்டும் அருளை, அன்னை மரியா நமக்குப் பெற்றுத் தருவாராக என்று டுவிட்டரில் செய்தி வெளியிட்டுள்ளார் திருத்தந்தை.

**5) உலகத் தலைவர்களிடம்:**

ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் 72 வது பொது அவை நடந்ததையொட்டி, பிரிவினைகள் மற்றும் கருத்தியல் சார்புடைய ஆதாயங்களைப் பின்னுக்குத் தள்ளி, முழுமனித சமுதாயத்தின் பொதுவான நலனைத் தேடுமாறு, உலகத்தலைவர்களிடம் கேட்டுக்கொண்டார் திருத்தந்தையவர்கள்.

**6) அன்னையின் பாதுகாப்பு:**

ஆண்டவர் நம்மை ஆதரவற்றவர்களாக விட்டுவிடவில்லை. நமக்கு ஓர் அன்னை இருக்கிறார். இயேசுவுக்கு இருந்த அதே அன்னைதான் அவர். அந்த அன்னை மரியா நம்மை எப்போதும் பாதுகாத்து வருகின்றார், கவனித்து அன்புடன் பராமரித்து அரவணைக்கின்றார் என்று திருத்தந்தை இம்மாதம் செபமாலை அன்னையைப் பற்றி கூறியுள்ளார்.

**7) செப உதவியும் பொருளுதவியும்:**

நிலநடுக்கங்களாலும் சூறாவளிகளாலும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ள மெக்ஸிகோ, மற்றும் கரீபியன் தீவுகளுக்காக செபிக்குமாறு கேட்டுக்கொண்டதோடு குவாதலூப்பே அன்னைமரி அவர்களுக்கு அருகே இருந்து ஆறுதல் தருவாராக என்றும் வேண்டினார். மேலும் 1,50,000 டாலர்கள் தொகையை நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உடனடியாக அனுப்பியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

*தொகுப்பு:* அருட் சகோ. **பொலன்ஷியா** OSM, *மரியின் ஊழியர் சபை*

# புனித செசிலியாவின் வரலாறு

**(பாடகர் குழுவின் பாதுகாவலர்)**

உரோமையில் செல்வச் செழிப்பான குடும்பத்தில் இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் பிறந்தவர் செசிலியா. சிறு வயதிலேயே இறைவனின் அன்பில் தன்னை இணைத்துக் கொண்டார். செபம் செய்வதில் ஆனந்தம் கொண்டார்

செசிலியாவுக்கு திருமணம் செய்ய பெற்றோர் முடிவு செய்தனர். தனது கன்னிமையை இறைவனுக்கு அர்ப்பணமாக்கி இருந்த செசிலியா திருமணத்திற்கு மறுப்பு தெரிவித்தார். சாக்கு உடை உடுத்தி பட்டினிகிடந்து மன்றாடினார். கடைசியில் பெற்றோரின் விருப்பமே வென்றது. திருப்பலியில் பாடப்படும் பாடல் வழியாக தன்னை விண்ணக இறைவனுக்கு ஒப்புக்கொடுத்தார்.

கிறிஸ்தவர் அல்லாத வலேரியன் என்பவருக்கு திருமணம் செய்து வைத்தார்கள். தன் கணவரிடம் இறைவனுக்கு தனது கற்பை அற்பணித்துவிட்டதை கூறினார். ஆண்டவரின் தூதர் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். என் தூய்மைக்குக் காவலாய் இருக்கிறார் என்றார். செசிலியாவின் பேச்சைக் கேட்டு அதிர்சியுற்ற வலேரியன் நீ கூறுவது உண்மை என்றால் அந்த தூதரை எனக்குக் காட்டு என்றான். முதலில் நீங்கள் கிறிஸ்துவின் விழுமியங்களை ஏற்று கிறிஸ்தவராக திருமுழுக்கு பெறுங்கள் நான் காட்டுகிறேன் என்றார் செசிலியா.

சம்மதம் தெரிவித்த கணவரை திருத்தந்தை “அர்பன்” அவர்களை சந்திக்க அனுப்பினார். வலேரியன் சென்றான். திருத்தந்தையின் கரத்தில் திருமுழுக்குப் பெற்றார். திரும்பி வீட்டிற்கு வந்தபோது செசிலியா வானதூதரிடம் உரையாடிக் கொண்டிருந்தார். வானதூதர் தம் கையில் ரோஜா மாலையும், லீலிமாலையும் வைத்திருந்தார். அதை இருவருக்கும் அணிவித்து மகிழ்ந்தார்.

இதைக்கண்ட வலேரியனின் சகோதரன் திபூர்சியுஸ் அனைத்தையும் அறிந்து நானும் கிறிஸ்துவை முழுமையாக நம்புகிறேன் என்று கூறி கிறிஸ்தவரானார். கிறிஸ்தவர்கள் என்ற காரணத்தினால் கொலை செய்யப்பட்ட விசுவாசிகளின் உடல்களை எடுத்து மூவரும் சேர்ந்து நல்லடக்கம் செய்து வந்தார்கள். மறைசாட்சிகளின் வீரத்தியாகத்தை அனைவருக்கும் எடுத்துரைத்தார்கள். இதை கேள்வியுற்ற உரோமை அதிகாரி முதலில் சகோதரர் இருவரையும் கைது செய்து வாளுக்கு இரையாக்கினான்.

இறைவன் துணையிருக்க எனக்கென்ன பயம் என்று செசிலியா இருவரின் உடலையும் எடுத்து அடக்கம் செய்தார். திரும்பி வருகையில் கைது செய்யப்பட்டார். உரோமைத் தெய்வத்திற்கு பலி

செலுத்தக் கூறினான். நான் இயேசு கிறிஸ்துவின் மணவாட்டி என்பதை நீ தெரிந்துகொள் என்று துணிந்து மொழிந்தார்.

கோபம் கொண்ட ஆளுனன் இவள் மூச்சுதிணறி சாகவேண்டும் என கட்டளையிட்டான். அதன்படி ஓர் அறையில் செசிலியா அடைக்கப்பட்டார். அந்த அறையில் தீ மூட்டினார்கள். புகையில் புதைந்து போவாள் என நினைத்தார்கள். மறுநாள் அறையின் கதவைத் திறந்து பார்த்தபோது சிரித்த முகத்தினராய் செசிலியா இருந்தார்.

## நம்பிக்கை

ஒவ்வொரு விடியலுக்கும்
வெளிச்சம் தருவது கதிரவன்
உன் வாழ்க்கையில் ஒவ்வொரு
நொடிகளுக்கும் வெளிச்சம்
தருவது உன் நம்பிக்கை
நம்பிக்கையோடு எழுந்திடு
வெளிச்சத்தை கண்டிட

## வெற்றி

எதுவும் இல்லாதபோது
சமாளிக்கும் திறமையும்
எல்லாம் இருக்கும்போது
நீ நடந்து கொள்ளும் முறையுமே
வெற்றியைத் தீர்மானிக்கிறது.

## அன்பு

காலம் ஒருவனை அறிவாளி
ஆக்கலாம்
ஆனால் அன்பு மட்டுமே
அவனை மனிதனாக மாற்றும்

தலையை வெட்டிக்கொலை செய்யுமாறு ஆளுனன் அறிவித்தான். காவலன் செசிலியாவின் தலையை வெட்டினான். தலை முழுமையாக கீழே அறுந்து விழுவதற்கு முன் அப்படியே போட்டுவிட்டு போய்விட்டான். அந்த நிலையிலும் மூன்று நாட்கள் இறைவனைப் புகழ்ந்து பாடிப்பாடி உயிர் வாழ்ந்து பிறகு இறந்தார் செசிலியா.

**ரா. டயானா ராபர்ட்**

அருளப்பர் அன்பியம்

## தனிமை

குடும்பத்தை விட்டு பிரிந்து
வேறு இடத்தில்
வேலை செய்பவர் தனிமை!
திருமணமான தம்பதிகள் கூட
நல்லுணர்வு, புரிதல் இல்லாத
காரணங்களால் தனிமை!
உணர்வில் தவிக்கின்றார்கள்!
இன்றைய வாழ்க்கைச்
சூழ்நிலையில் தனிமை!
வீட்டில் மனைவி மட்டும்
இருக்கும் சூழ்நிலை, தனிமை!
*“நான் உன்னை விட்டு*
*விலகுவதுமில்லை; உன்னைக்*
*கைவிடுவதுமில்லை”* (எபி 13:5)
கடவுள் எப்பொழுதும் நம்முடன்
இருக்கின்றார் என்னும் செப
உணர்வை வளர்த்துக் கொள்வோம்!
தனிமை உணர்வு
தோன்றும் பொழுது!

**மேரி ஆண்டனி செலின்**

சூசையப்பர் அன்பியம்

## தினசரி கடைபிடிக்க வேண்டிய சத்தான உணவுகள்

| கிழமைகள் | காலை | மதியம் | இரவு |
|---|---|---|---|
| திங்கள் | இட்லி, பாசிப்பருப்பு சாம்பார் | புளிப்பு சம்பந்தமான உணவுகள் (எலுமிச்சை, நெல்லி, தக்காளி, தயிர் சாதங்கள்) கூட்டு - பருப்பு கீரை, உருளைகிழங்கு பொறியல், கருவாடு | சோறு, இரசம், கூட்டு - பீட்ரூட் (40 வயதுக்கு மேல் இட்லி, கார சட்னி) |
| செவ்வாய் | தோசை, தேங்காய் சட்னி | சாம்பார் சாதம், உளுந்து சாதம், கறிவேப்பிலை சாதம் கூட்டு - நீர் காய்கள் (கேரட், முள்ளங்கி, நூக்கல், வெள்ளரிக்காய், சௌசௌ) | மூடி சுட்ட தோசை (எண்ணெய் சேர்க்காமல்) |
| புதன் | பூரி- உருளைகிழங்கு கூட்டு (கடலை பருப்பு சேர்த்து சாப்பிட வேண்டும்) | மீன், மீன் பொறியல், அப்பளம் அல்லது வெண்டைக்காய் சாம்பார் | சப்பாத்தி - தக்காளி சட்னி (வெங்காயம், பூண்டு நல்லெண்ணெயில் வதக்கி செய்ய வேண்டும்) |
| வியாழன் | புட்டு (கேழ்வரகு, அரிசி) கருப்பட்டி பாகு, வாழைப்பழம், முளைகட்டிய பயிறு, அப்பளம் | முட்டை குழம்பு, முட்டை பொரியல் கூட்டு - நார் காய்கள் (புடலை, பீன்ஸ், அவரை) | ஆப்பம் அல்லது இடியாப்பம் - தேங்காய்பால் |
| வெள்ளி | நோன்பு- வாழைப்பழம் 1, அறுகம்புல் சாறு 1 கப் | தானிய சோறு, கூட்டு - உருளைகிழங்கு பொறியல் | சோறு - பூண்டு குழம்பு, வடகத் துவையல் (40 வயத்துக்கு மேல் இட்லி) |
| சனி | பொங்கல் - துவையல், சட்னி, வடை | கான ரசம் - பருப்பு கூட்டு, அப்பளம், முருங்கை கீரை | பரோட்டா (வீட்டில் செய்யலாம்) |
| ஞாயிறு | பிரெட், ஜாம், அவித்த முட்டை | புதிதாக உரித்த இறைச்சி | இட்லி, கார சட்னி |

அருட்தந்தை. **தா. சூசைமணி**

## தன் சுத்தம்

1. தினசரி குளிக்க வேண்டும்.
2. சாப்பிடும் முன்பும் பின்பும் கை கழுவ வேண்டும்.
3. நகங்களை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். நகப்பூச்சு மற்றும் நகைகள் அணிவதைத் தவிர்க்க வேண்டும்.
4. சாப்பிடும் முன்பும் பின்பும் வாய் மற்றும் பற்களைக் கழுவ வேண்டும்.
5. சமைக்கும்போது முகம் வாய் மூக்கினைத் தொடாமல் இருக்க வேண்டும்.
6. உணவிற்கு அருகில் தும்முதல், இருமுதல் கூடாது.
7. உணவை தேக்கரண்டியினால் சுவை பார்க்க வேண்டும்.
8. தினமும் ஆடைகள், உள்ளாடைகளை மாற்ற வேண்டும்.
9. திறந்தவெளியில் மலம் கழிப்பதைத் தவிர்த்து தூய்மையான கழிப்பறையை உபயோகிக்க வேண்டும்.
10. மருத்துவர் அறிவுரையின்றி மருந்து வாங்கி உண்ணக் கூடாது.

## சீனிவாச இராமானுஜன் (1887 - 1920)

ஈரோட்டில் பிறந்த இந்தியக் கணித மேதையான இராமானுஜத்தின் எண்ணியல் கோட்பாடுகள் குறித்த அவரது பங்களிப்பு அவருக்கு மிகப்பெரும் உலகப் புகழைப் பெற்றுத் தந்தது. மிகக் குறுகிய அவரது வாழ்நாட்களுக்குள்ளேயே சுமார் 3900 ஆராய்ச்சி முடிவுகளைத் தனியாகவே தொகுத்து வெளியிட்டுச் சாதனை படைத்துள்ளார்.

## புற்றுநோயைத் தடுக்கும் முறைகள்

1. புகைப்பிடித்தல் கூடாது
2. காய்கறிகள் மற்றும் பழங்கள் நிறைய உண்பது மிகவும் நல்லது.
3. அசைவ உணவுகளைவிட காய்கறிகளில் நார்ச்சத்துக்களும் நிறைவுற்ற கொழுப்பு அமிலங்களும் உள்ளன.
4. வைட்டமின் C மற்றும் பிற வைட்டமின் சார்ந்த உணவுகளை உண்ணுதல்.
5. முளைகட்டிய பயறு வகைகளை உண்ணுதல்.
6. அளவுக்கு அதிகமான உடல் எடையை குறைத்தல்.
7. ஊறுகாய் மற்றும் உப்பு நிறைந்த உணவுகளைத் தவிர்த்தல்.
8. அறுசுவைச் சிகிச்சை, ஹீமோதெரபி, ரேடியோதெராபி அல்லது ஹார்மோனல் தெராபி மூலமாக குணப்படுத்துதல்.

**ர. சகாய அனிதா**
திருக்குடும்ப நடுநிலைப்பள்ளி - வடக்கன்குளம்

## மழலையர் கைவண்ணம்

**இயற்கை**

I பரிசு




அ. அபிஷேக் VIII

பெரியநாயகி அன்பியம்

II பரிசு

மோ. மெலினா V


பாலகிருஷ்ணா பள்ளி




Diksha III

*குழந்தைகள் வருமானம்*

*பெற்றோரின் அவமானம்!*





ர. சகாய அனிதா VIII

தி.கு.ந.நி.பள்ளி

மோ. மெலினா விண்ணரசி V

Arockya Linado

குழந்தைகள் பகுதி

## கணக்குப் புதிர்கள்:

1. ஒரு குளக்கரையில் ஐந்து தவளைகள் இருக்கின்றன. அவற்றில் மூன்று குளத்தில் குதிக்க நினைக்கின்றன. ஐந்து நிமிடங்கள் கழித்து கரையில் எத்தனைத் தவளைகள் இருக்கும்?
2. மூன்று பேர் ஒரு இருட்டு அறையில் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் நான் ரஜினிகாந்த் என்கிறார். ஒருவர் நான் கமலஹாசன் என்கிறார். இன்னொருவர் நான் எம்.ஜி.ஆர். என்கிறார். இவர்களில் ஒருவர் சொல்வது பொய். அது யார்?
3. ஏழு ஆடுகள் ஏழு கட்டுப் புற்களை ஏழு நாட்களில் சாப்பிடும். அப்படியானால் ஒரு ஆடு ஒரு கட்டுப் புல்லை எத்தனை நாட்களில் சாப்பிடும்.

தொகுப்பு: திருமதி. **பிரேமா மாணிக்கராஜ்**

## யூக்ளிட் வடிவியலின் தந்தை

மாபெரும் கிரேக்கக் கணித மேதை யூக்ளிட் வடிவியலில் தர்க்க அடிப்படையிலான சிந்தனைக்கு வித்திட்டவராவார். யூக்ளிட் கிறிஸ்து பிறப்பதற்கு 300 ஆண்டுகளுக்கு முன்பே வடிவியல் பற்றிய பல்வேறு தகவல்களைத் திரட்டி 13 புத்தகங்களாக வெளியிட்டுள்ளார். இப்புத்தகங்கள் யூக்ளிட் எலமன்ட்ஸ் என்று அழைக்கப்படுகிறது. யூக்ளிட் முழுமை அதன் எந்தப் பகுதிகளை விடவும் பெரியதாகும் என்றார்.

## புகைப்பதால் உண்டாகும் தீய விளைவுகள்

1. கெட்ட கொழுப்பின் அளவை அதிகரித்து நல்ல கொழுப்பின் அளவைக் குறைக்கிறது.
2. இரத்த நாளங்கள் சுருங்கி அதன் சுவர்கள் பாதிப்படைதல்.
3. இரத்தம் உறைதல் நடைபெற்று மாரடைப்பு மற்றும் வாதநோய்கள் வரும்.
4. புற்றுநோய்கள், ஆஸ்துமா பிராங்கைடிஸ் நிமோனியா மற்றும் எம்பைசீமா போன்ற நோய்கள் தீவிரமாகும்.
5. வயிற்றில் அல்சர், கண்புரை நோய்கள் உண்டாகக் காரணமாகும்.
6. ஆண் மற்றும் பெண்களுக்கு மலட்டுத் தன்மையை ஏற்படுத்தும்.
7. புகைப்பவரின் வழிதோன்றல்களுக்கும் ஆஸ்துமா மற்றும் காதுதொடர்புள்ள வியாதிகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

**இ.மரிய தனுஷியா**
திகு.ந.நி.பள்ளி – வடக்கன்குளம்

# படைப்பாளிகளை படைக்கும் பக்கம் இது



- மேலே கொடுக்கப்பட்டுள்ள படத்திற்கான பொருத்தமான கவிதை ஒன்றை நறுக்கென **10 வரிகளில்** எழுதி 16ம் தேதிக்குள் பங்குத்தந்தையிடம் கொடுக்கவும்.
- சிறந்த இரண்டு படைப்பாளிகளுக்கு பரிசுகள் வழங்கப்படும்.
- மனதைக் கவர்ந்த கவிதைகள் மாதா மலரில் வெளியிடப்படும்.

**கவிஞர்களே எழுதுங்கள்...**

*கற்பனை உலகை உருவாக்குங்கள்...*

## முதல் பரிசு பெறும் கவிதை (அக்டோபர்)

**தெவிட்டாத செல்வம்**

சின்ன சின்ன குழந்தையைப் பார்!
சிவந்த கன்னம் குழந்தையைப் பார்!
சிரிப்பூட்டும் நல்ல குழந்தையைப் பார்!
சின்ன மழலைப் பேச்சைப் பார்!
சில நேரம் செய்யும் குறும்பைப் பார்!
சின்ன கோபம் அழகைப் பார்!
சிணுங்கி சிணுங்கி அழுவதைப் பார்!
சிறந்த மனிதனாய் வளர்வதைப் பார்!
சிந்தித்து செயல்படும் மனதைப்பார்!
குழந்தையே என்பதைப் பார்!

M. **ஜோ ரெனில்டா**
பூண்டி மாதா அன்பியம்

## இரண்டாம் பரிசு பெறும் கவிதை (அக்டோபர்)

**குழந்தை**

தாய் தந்தை என்ற ஓவியர்களால்
வரையப்பட்ட மாசற்ற ஓவியம்!
இணையில்லா இறைகுணத்தை தன்னகத்தே
கொண்டுள்ள ஓர் அற்புதம்!
கள்ளமில்லா சிரிப்பு அது
கவலைகள் போக்கும் மாமருந்து!
கொஞ்சும் மழலைபேச்சு கேட்டு
பட்ட வேதனைகள் பறந்து போகும்!
மொத்தத்தில் வாழ்வின் வசந்தம்!
தாய்மை முழுமை “குழந்தை”

திருமதி. **சிந்துஜா விஜயன்**
ஜார்ஜியார் அன்பியம்

## பாராட்டுப்பெறும் கவிதைகள்

### குழந்தையின் சிறப்பு

என்னோடு விளையாடும் – என் குட்டி
தேவதையே உன் பிஞ்சு விரல்களால் என்னை
அடித்தாலும் சின்ன இதழ்களால் என்னை
கடித்தாலும் நீ கொஞ்சம் சிரித்தாலும் என்னை
கொஞ்சி அழைத்தாலும் இன்பமாக இனிக்குதடி
அன்பே உன் பூமேனி மலரின் இதழ்களால்
உன் விரல் கொண்டு என் கண்ணம் வருடினால்
மனதில் ஆனந்தம் பொங்குதடி
உன்முகம் பார்த்தால்
என் சாபமும் தீருதடி

**மேரி தர்ஷினி.டி**
பூண்டி மாதா அன்பியம்

### குழந்தைகள்

குழந்தைகள் இல்லையெனில்
குதூகலம் இல்லை
வாழ்க்கையின் சிறப்பு
குழந்தைகளின் சிரிப்பு
கவலையை மறக்கச் செய்யும்
குழந்தைகளின் பேச்சு
வேலை வேலை யென்று
ஒதுக்காதீர்கள் குழந்தையை
இப்போது தவறவிட்டால்
எப்போது கேட்பீர் மழலைப்பேச்சு?

**S. மல்லிகா** தூய கார்மேல் அன்னை அன்பியம்

### மழலை

மயக்கும் சிரிப்புடையான் நீ
மயக்கும் மொழியுடையான் நீ
குற்றமில்லா குருத்தும் நீ
குலங்களின் விளக்கும் நீ
சங்கடத்தை மறக்கடிப்பாய் நீ
சரித்திரத்தின் வித்தாவாய் நீ
இனிய இல்லறத்தின் பரிசும் நீ
இறையவனின் நன்கொடையும் நீ
உனக்காய் ஏங்கும் மடிதவள
உன்னதனருளால் வருவாய் நீ... நீ...

**S. ஜோஃப்ரனி** குழந்தை யேசு அன்பியம்

### செல்ல ரதம்

ரோஜா நிறமே,
பால் வடியும் முகமே,
பொன்போன்ற மேனி,
இனிக்கும் தேன் நீ,
தங்கத் தாரகையே,
தவழ்ந்து வரும் தாமரையே,
தத்தித் தாவி விழுந்தும் பின் எழுந்தும்,
எட்டி பின் எட்டு அடிவைத்து
நடைபயின்று வரும் செல்ல ரதமே
இதை காண கண் வேண்டும் நிதமே,

**ரா. டயானா ராபர்ட்,**
அருளப்பர் அன்பியம்

### இல்லறச் செல்வங்கள்

கள்ளங்கபடமற்ற கடவுள் உள்ளம்
காணக்கிடைக்கா குழந்தை நெஞ்சம்!
மழலை மொழி கொஞ்சும் பேச்சும்
மங்கா மகிழ்வின் முகமும்!
தத்தி தத்தி தவழும் நடையில்
தரணியை ஆளும் வருங்கால தொனியில்!
வஞ்சகம் நினையா மனதும்
வாய்மை சொல் நல்நாவும்!
குழந்தைகளுக்கே கிடைத்த வரம்!
இல்லறம் என்னும் நல்லறத்தில்
இறைவன் தந்த சிறந்த பரிசுதான் "குழந்தைகள்"

திருமதி. **இ. சாராள் ராபின்சன்**,
தூய சவேரியார் ஆலயம், ஆவரைகுளம்.

# வடவை மாதா
# திருமண தகவல் மையம்

**பரிசுத்த திருக்குடும்ப ஆலயம்**
**வடக்கன்குளம் – 627116.**



பங்கு மக்களின் நலன் கருதி நம் ஆலய நிர்வாகத்தின் மேற்பார்வையில் திருமண தகவல் மையம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த திருமண தகவல் மையம் அனைத்து சமூகத்தினருக்கும் உற்ற தோழனாக செயல்பட காத்திருக்கின்றது. இந்த சேவை மையத்தை பயன்படுத்தி நல்ல மணமகன், மணமகள் வரன்களை தெரிந்து கொள்ளலாம். விருப்பமுள்ள நபர்கள் தங்கள் பெயர், முகவரி மற்றும் விபரங்களை பங்குகுத்தந்தையிடம் தெரிவித்து பதிவு செய்து கொள்ளலாம். பதிவு செய்தவர்களின் விபரங்கள் பாதுகாக்கப்படும்.

- **பதிவு கட்டணம் வருடத்திற்கு 200 மட்டுமே.**
- **ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் பதிவை புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.**
- **திருமணம் நடந்தவுடன் தகவல் மையத்திற்கு தெரியப்படுத்த வேண்டியது பதிவு செய்தவரின் கடமையாகும்.**
- **பதிவு செய்ய வருபவர்கள் குடும்ப கையேடு கொண்டு வரவேண்டும்.**



தொடர்புக்கு
**பங்குத்தந்தை அலுவலகம்**
**பரிசுத்த திருக்குடும்ப ஆலயம்**
வடக்கன்குளம்

## மருத்துவக் குறிப்பு

1. தினமும் மணத்தக்காளி கீரையை துவயல் செய்து மதிய உணவுடன் உண்டு வர குடல்புண் குணமாகும்.
2. வெள்ளரி சாறு, எலுமிச்சை சாறு, இரண்டையும் கலந்து முகத்தில் தடவி 10 நிமிடம் கழித்து முகம் கழுவினால் பளபளப்பு உண்டாகும்.
3. பாலுடன் மஞ்சள் போட்டு காய்ச்சி காலை, மாலை தினமும் குடிக்க தொண்டைவலி குணமாகும்.
4. தும்பை இலை, வெங்காயம் இவற்றை தண்ணீர் விட்டு சுண்ட காய்த்து தேன் கலந்து காலை, மாலை குடிக்க சளி தொந்தரவு குறையும்.
5. அத்திச் செடியின் பூவை நன்றாகக் கொதிக்க வைத்து வடிக்கட்டி குடித்து வந்தால் வாந்தி குறையும்.
6. குழந்தைகளுக்கு ஏற்படும் தொடர் இருமலுக்கு சிறிது பெருங்காயத்தை வெந்நீரில் கரைத்து தெளிந்த நீரைக் கொடுத்து வரவும்.

## சிந்தனைத் துளிகள்

*1. எண்ணங்கள் அனைத்தும் உயர்வாக இருக்க வேண்டும்.*
*2. கோபமும் பொறாமையும் மனிதனை கொன்றுவிடும் சக்தியைப் படைத்தது.*
*3. கோபம் வரும்போது அதை அடக்கி ஆள்வதே வீரமாகும்.*
*4. கட்டுப்பாடான சீரான வழியில் நம்மை நடத்திக் கொண்டால் பண்பு வளரும்.*
*5. நீங்கள் நம்பிக்கையுடன் உழையுங்கள் உங்கள் ஆசைகள் நிறைவேற காண்பீர்கள்.*
*6. தைரியமுள்ளவனால் மட்டுமே நேர்மையாக நடக்க முடியும்.*
*7. உழைப்பவனே கொடுக்க முடியும்; பெறவும் முடியும்.*
*8. தூய்மையான உள்ளத்தில் வஞ்சக எண்ணங்களுக்கு சிறிதும் இடம் கிடையாது.*
*9. சேமித்து வைப்பதே தலைசிறந்த வருமானம்.*
*10. சிக்கனமும் சேமிப்பும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் இரு கருவிகள்.*
*11. தன்மீது நம்பிக்கை வைப்பவன் வெற்றி பெறுவான். மகிழ்ச்சி அடைவான்.*
*12. நன்றியுள்ள மனிதனுக்கு கேட்டதை விட அதிகம் கொடு.*
*13. புத்தகம் இல்லாத அறை ஆன்மா இல்லாத உடல்.*
*14. நல்லவற்றை நாடும் துணிவும், கெட்டவற்றைக் கண்டு அஞ்சும் பண்பும் உடையவள் பெண்.*
*15. சொர்க்கத்தில் அடிமையாய் இருப்பதைவிட நரகத்தில் அரசனாய் இரு.*
*16. நாம் தர்மத்தை கடைப்பிடித்தால் அது நம்மை காக்கும்.*

**ஆக்னஸ் ஷெரின்**, ஜோசப் ஆ.பள்ளி.

## வடவை நடந்து வந்த பாதை அக்டோபர் - 2017

***01-10-2017 ஞாயிறு:*** *இன்று குழந்தை இயேசுவின் தெரசம்மாள் திருவிழா முதல் திருப்பலி கபிரியேல் அன்பிய மக்களால் சிறப்பிக்கப்பட்டது. இரண்டாம் திருப்பலியை சிறுமலர் குழந்தை தெரசாள் அன்பிய மக்கள் சிறப்பித்தார்கள். திருப்பலிகள் முடிந்தவுடன் ரோஜா மலர்கள் மந்திரிக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டது. இம்மாதம் ஜெபமாலை அன்னைக்கு ஒப்புக் கொடுக்கப்பட்ட மாதம். முதல் திருப்பலிக்குப் பின்பும், மதியம் 12.00 மணிக்கும், மாலை 6.30 மணிக்கும் என ஒவ்வொரு நாளும் மூன்று ஜெபமாலை செபிக்கப்பட்டது. மாலையில் நற்கருணை ஆசீர் நடைபெற்றது.*

***04-10-2017 புதன்:*** *இன்று புனித பிரான்சிஸ் அசிசியார் திருவிழா. முதல் திருப்பலியை அசிசியார் அன்பிய மக்கள் சிறப்பு செய்தார்கள்.*

***05-10-2017 வியாழன்:*** *இன்று மாதத்தின் முதல் வியாழன். மாலை 6.30 மணிக்கு திருமணி ஆராதனை நடைபெற்றது. இதை டொன்போஸ்கோ சபை இளைஞர்கள் சிறப்பித்தார்கள்.*

***06-10-2017 வெள்ளி :*** *இன்று மாதத்தின் முதல் வெள்ளி. பக்தி முயற்சியாக காலை 4.30 மணிக்கு திவ்விய நற்கருணை எழுந்தேற்றம் செய்து பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், இறைமக்கள் அனைவரும் மௌன ஆராதனை செய்தார்கள். அதைத் தொடர்ந்து இரண்டு திருப்பலிகள் நடைபெற்றன. இரண்டாம் திருப்பலி முடிந்த பின் நோயாளிகளுக்கும், முதியவர்களுக்கும் பங்குத்தந்தையர்களால் திவ்ய நற்கருணை வழங்கப்பட்டது. சேனையாளர்கள் இதற்கான உதவி செய்தார்கள்.*

***07-10-2017 சனி:*** *இன்று மாதத்தின் முதல் சனி. ஜெபமாலை அன்னை திருவிழா. முதல் திருப்பலியை ஜெபமாலை அன்னை அன்பிய மக்கள் சிறப்பித்தார்கள். இரண்டாம் திருப்பலி முடிந்தவுடன் காலை 7.00 மணி முதல் 10.45 வரை தொடர் ஜெபமாலை நடைபெற்றது. 11.00 மணி முதல் பகல் 1.00 மணிவரை பாத்திமா அன்னையின் பரிகார பக்தி முயற்சிகள் நடந்தது. பக்தி முயற்சியில் கலந்து கொண்ட வெளியூர் திருப்பயணிகளுக்கு பங்குத்தந்தை அவர்கள் இல்லத்தில் வைத்து மதியஉணவு வழங்கப்பட்டது. தொடர்ந்து பகல் 1.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை தொடர் ஜெபமாலை நடைபெற்றது. தொடர் ஜெபமாலையை அன்பிய மக்கள் அவர்களுக்கு குறிக்கப்பட்ட நேரத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். மாலையில் 6.30 மணிக்கு ஜெபமாலையும் அதை தொடர்ந்து திவ்விய நற்கருணை ஆசீரும் நடைபெற்றன. வின்சென்ட் தே பவுல் சபையினர் தங்கள் திருவிழாவிற்கான சிறப்பு மாலை ஆராதனையை சிறப்பித்தார்கள்.*

***08-10-2017 ஞாயிறு:*** *இன்று முதல் திருப்பலியை சிறுமலர் தெரசாள் அன்பிய மக்கள் சிறப்பித்தார்கள். இரண்டாம் திருப்பலியை வின்சென்ட் தே பவுல் சபையினர் திருவிழா திருப்பலியாக சிறப்பு செய்தார்கள். இன்று மாலை 4.00 மணிக்கு வழிப்பாட்டுக் குழுவினர்கள் கூட்டம் நடைபெற்றது.*

***10-10-2017 செவ்வாய்:*** *இன்று காலை 10 மணி முதல் நண்பகல் 2 மணி வரை நம் மறைமாவட்ட குருக்களுக்கான தியானம் பணகுடியில் நடைபெற்றது. இதில் 21 குருக்கள் கலந்து கொண்டார்கள். அதன்பின்பு குருக்கள் களக்காடு தலையணைக்கு சுற்றுலா சென்றனர்.*

***13-10-2017 வெள்ளி:*** *இன்று மாலை 6.30 மணிக்கு அருளாளர் தேவசகாயம் திருவுருவம் ஜெபமாலை பவனியாக நடைபெற்றது. அதை தொடர்ந்து நற்கருணை ஆசீர் நடைபெற்றது.*

*14-10-2017 **சனி:** இன்று மாலை காட்சி கொடுத்த மாதா நவநாள் ஆரம்பமானது. மாலை 6.30 மணிக்கு ஜெபமாலைப் பவனி ரதவீதியில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து காட்சி கொடுத்த மாதா கோவில் முன்பாக நற்கருணை ஆசீர் நடைபெற்றது. இன்று சாமுவேல் மண்டல அன்பிய மக்கள் சிறப்பு செய்தார்கள். சிறுவழி இயக்க மாணவர்கள் சபை திருவிழாவிற்கான சிறப்பு மாலை ஆராதனையைச் சிறப்பித்தார்கள். சபையில் புதிய உறுப்பினர்கள் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டார்கள்.*

*15-10-2017 **ஞாயிறு:** இன்று காலை இரண்டாம் திருப்பலியை சிறுவழி இயக்க சபை மாணவர்கள் தங்கள் சபைத் திருவிழா திருப்பலியைச் சிறப்பித்தார்கள். காலை 10.30 மணிக்கு பங்கு நிதிக்குழு கூட்டம் நடைபெற்றது. பிற்பகல் 3.00 மணிக்கு அன்பிய பொறுப்பாளர்கள் கூட்டம் நடைபெற்றது. மாலை 6.30 மணிக்கு ஜெபமாலைப் பவனியும், நற்கருணை ஆசீரும் நடைபெற்றது. இன்று எசாயா மண்டல அன்பிய மக்கள் மற்றும் நமது பங்கின் அனைத்து பள்ளிகளின் ஆசிரியர்கள் சிறப்பு செய்தார்கள்.*

*16-10-2017 **திங்கள்:** இன்று மாலை ஜெபமாலைப் பவனியை ஏரேமியா மண்டல அன்பிய மக்களும் மரிய கொரற்றி சபை மாணவிகளும் சிறப்பித்தார்கள்.*

*17-10-2017 **செவ்வாய்:** இன்று மாலை ஜெபமாலைப் பவனியை எசேக்கியேல் மண்டல அன்பிய மக்களும், மரியாயின் சேனையினர், புனித வின்சென்ட் தே பவுல் சபையினரும் சிறப்பித்தனர்.*

*18-10-2017 **புதன்:** இன்று மாலை ஜெபமாலைப் பவனியை தானியேல் மண்டல அன்பிய மக்களும், பரிசுத்த திருக்குடும்ப சபையினரும் சிறப்பித்தார்கள்.*

*19-10-2017 **வியாழன்:** இன்று மாலை ஜெபமாலைப் பவனியை ஓசாயா மண்டல அன்பிய மக்களும், தொமினிக் சாவியோ சபை மாணவர்களும் சிறப்பித்தார்கள்.*

*20-10-2017 **வெள்ளி:** இன்று காலை 11.00 மணிக்கு தூய தெரசாள் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் தங்கள் பள்ளியின் பாதுகாவலியின் திருவிழாவை முன்னிட்டு நன்றி திருப்பலி வைத்து சிறப்பித்தார்கள். திருப்பலியை உதவி பங்குத்தந்தை அருட்திரு. தா. சூசைமணி அவர்கள் நிறைவேற்றினார்கள். இன்று மாலை ஜெபமாலைப் பவனியை ஆமோஸ் மண்டல அன்பிய மக்களும், நற்கருணை வீராங்கணை சபை மாணவியரும் சிறப்பித்தார்கள்.*

*21-10-2017 **சனி:** இன்று மாலை ஜெபமாலைப் பவனியை யோனா மண்டல அன்பிய மக்களும், தொன்போஸ்கோ சபை இளைஞர்களும், அமல அன்னை இளம் பெண்கள் சபையினரும் சிறப்பித்தார்கள்.*

*22-10-2017 **ஞாயிறு:** இன்று காலை இரண்டாம் திருப்பலியை யூதா ததேயு அன்பிய மக்கள் சிறப்பித்தார்கள். இன்று மாலை ஜெபமாலைப் பவனியை மீக்கா மண்டல அன்பிய மக்களும், பங்கு நிதிக்குழுவினரும் சிறப்பித்தார்கள். திருவிழா சிறப்பு மாலை ஆராதனையை பரிசுத்த பரலோக அன்னை அன்பிய மக்கள் சிறப்பித்தார்கள்.*

*23-10-2017 **திங்கள்:** இன்று காலை வழக்கம் போல் இரண்டு திருப்பலிகள் நடைபெற்றன. முற்பகல் 10.30 மணிக்கு காட்சி கொடுத்த புதுமை மாதாவிற்கு பரிகார ஜெபவழிபாடு நடைபெற்றது. 12.30 மணிக்கு பக்தர்களுக்கு அசன உணவு வழங்கப்பட்டது. மாலை 6.30 மணிக்கு அன்னையின் திருவுருவம் ஜெபமாலைப் பவனியாகச் சென்று இராதாபுரம் சாலை வழியாக ஆலயத்தை வந்தடைந்தது. அதை தொடர்ந்து திருவிழா கூட்டுத்திருப்பலி பரிசுத்த பரலோக அன்னை அன்பிய மக்களால் சிறப்பிக்கப்பட்டது.*

***28-10-2017 சனி:*** *இன்று யூதா ததேயு திருவிழா. முதல் திருப்பலி யூதா ததேயு அன்பிய மக்கள் சிறப்பு செய்தார்கள்.*

***29-10-2017 ஞாயிறு:*** *இன்று காலை இரண்டாம் திருப்பலியை உலக இரட்சகர் அன்பிய மக்கள் சிறப்பு செய்தார்கள்.*

***31-10-2017 செவ்வாய்:*** *இன்று ஜெபமாலை மாதத்தின் நிறைவு நாள். மாலை 5.30 மணிக்கு அன்னையின் அற்புத திருவுருவம் ஜெபமாலை பவனியாக பங்கு ஆலயத்தில் தொடங்கி நம் மறைமாவட்ட ஓய்வு பெற்ற குருக்கள் வசிக்கும் அமலிவனத்திலுள்ள பரிசுத்த லூர்து மாதா கெபியில் நிறைவுற்றது. அங்கே ஜெபமாலை பற்றிய மறையுரையும் நற்கருணை ஆசீரும் நடைபெற்றன. வந்திருந்த அனைவருக்கும் மரியாயின் சேனையினர் சிற்றுண்டி ஏற்பாடு செய்திருந்தனர்.*

தொகுப்பு: **K.A. செல்வராஜ்**
தூய பரலோக அன்னை அன்பியம்

---

## அறிந்து கொள்வோம்

1. போலியோ வியாதியை தடுக்க மருந்து கண்டுபிடித்தவர்
2. புவி ஈர்ப்பு விசையைக் கண்டறிந்த விஞ்ஞானி
3. விண்வெளிக்கு முதலில் செயற்கைகோள் அனுப்பிய நாடு
4. முதன் முதலில் விண்ணில் பறந்த செயற்கைகோள்
5. நிலவில் முதலில் காலடி வைத்தவர்
6. இந்தியாவின் முதல் விண்வெளி வீரர்
7. இந்தியா விண்ணில் செலுத்திய முதல் செயற்கைகோள்
8. நிலவுக்கு முதலில் மனிதனை அனுப்பிய நாடு
9. அமெரிக்காவின் முதல் செயற்கைக்கோள்
10. உலகிலேயே முதன் முதலில் துப்பாக்கி செய்தது
11. மெர்க்குரி சூரியனைச் சுற்றி வருவதற்கு ஆகும் நாட்கள்
12. வீனஸ் சூரியனைச் சுற்றி வருவதற்கு ஆகும் நாட்கள்
13. பூமி சூரியனைச் சுற்றி வருவதற்கு ஆகும் நாட்கள்
14. மார்ஸ் சூரியனைச் சுற்றி வருவதற்கு ஆகும் நாட்கள்
15. ஜீபிடர் சூரியனைச் சுற்றி வருவதற்கு ஆகும் நாட்கள்
16. சனி சூரியனைச் சுற்றி வருவதற்கு ஆகும் நாட்கள்
17. யுரேனஸ் சூரியனைச் சுற்றி வருவதற்கு ஆகும் நாட்கள்
18. நெப்டியூன் சூரியனைச் சுற்றி வருவதற்கு ஆகும் நாட்கள்
19. பூமியைவிட சூரியனின் பரப்பு
20. மனிதன் நிலவில் இறங்கிய நாள்
21. நிலவு ஒளி பூமிக்கு வர ஆகும் நேரம்

**மரிய தனுஷியா**
இராயப்பர் அன்பியம்

**விடைகள்:** 1. டாக்டர் ஜோனஸ் சாக், 2. சர் ஐசக் நியூட்டன், 3. ரஷ்யா, 4. ஸ்புட்னிக் (ரஷ்யா), 5. நீல் ஆம்ஸ்ட்ராங், 6. ராகேஷ்சர்மா, 7. ஆரியப்பட்டா, 8. அமெரிக்கா, 9. எக்ஸ் புளோரர் - 1, 10. கோல்ட்-1835ம் ஆண்டு, 11. 88 நாட்கள், 12. 225 நாட்கள், 13. 365.25 நாட்கள், 14. 687 நாட்கள், 15. 12 வருடங்கள், 16. 29.8 வருடங்கள், 17. 84 வருடங்கள், 18. 165 வருடங்கள், 19. 12,000 மடங்கு பெரியது, 20. 21, ஜூலை 1969, 21. 1.3 வினாடி.

# நிகழவிருப்பவை

**நவம்பர் மாதம் - இறந்த விசுவாசிகளை நினைவுகூறும் மாதம்**

*நவம்பர் 2 வியாழன்*

காலை 5 & 6.10 மணி – பங்கு ஆலயத்தில் திருப்பலி

மாலை 3.30 மணி – கல்லறைத் தோட்டத்தில் செபமாலை, திருப்பலி

*குறிப்பு: திருப்பலி முடிந்தவுடன் கல்லறைகள் மந்திரிக்கப்படும்.*

**ஊர் அசனத்திற்கான பொதுக்கூட்டம்:**

05.11.2017 : காலை 10.30 மணி

நவம்பர் 10 : சனிக்கிழமை மாலை 6.30 மணி தூய செசிலி அம்மாள் நவநாள் ஆரம்பம்

நவம்பர் 18 : சனிக்கிழமை சிறப்பு மாலை ஆராதனை

நவம்பர் 19 : ஞாயிறு காலை 7.00 மணி திருவிழா திருப்பலி

**கிறிஸ்து அரசர் பெருவிழா & நற்கருணைப் பவனி:**

நவநாள் ஆரம்பம் : 17.11.2017 வெள்ளி

நவம்பர் 25 சனி : மாலை 6.30 மணி

★ நற்கருணை வீராங்கனை சபையினர் தங்களது திருவிழா மாலை ஆராதனையை சிறப்பிக்கின்றனர்.

★ புதிய பொறுப்பாளர்கள் பொறுப்பு ஏற்பார்கள்.

★ புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்படுவார்கள்.

நவம்பர் 26 ஞாயிற்றுக்கிழமை: *காலை 7.00 மணி*

நற்கருணை வீராங்கனை சபை மாணவியரின் சபை திருவிழா திருப்பலி.

**திருப்பலி முடிந்தது முதல்:**

நாள் முழுவதும் நற்கருணை ஆராதனை அன்பியங்கள் அடிப்படையில் நடைபெறும். மாலை 4.00 மணி : நற்கருணை ஆசீர்.

## குழந்தைகள் தினவிழா

**12.11.2017 ஞாயிற்றுக்கிழமை:**

காலை 7.00 மணி : குழந்தைகளுக்கான சிறப்புத் திருப்பலி

காலை 10.00 மணி : விளையாட்டுப்போட்டிகள்

மதியம் 1.30 மணி : கலைத்திறன் போட்டிகள் (திருக்குடும்ப நடுநிலைப்பள்ளி)

**14.11.2017 செவ்வாய்கிழமை:**

இரவு 7.00 மணி : கலைநிகழ்வு மற்றும் பரிசளிப்பு

## குருமாணவர் நிதி

| | |
|---|---|
| கிறிஸ்து அரசர் அன்பியம் | 300 |
| தூய காணிக்கை மாதா அன்பியம் | 200 |
| தூய அசிசியார் அன்பியம் | 800 |
| தூய பரலோக அன்னை அன்பியம் | 1000 |
| தூய அருளப்பர் அன்பியம் | 700 |
| தூய கார்மல் அன்னை அன்பியம் | 100 |
| தூய சவேரியார் அன்பியம் | 200 |
| ஜோசப் காலின்ஸ் | 3000 |
| மரிய பிராங்கோ | 500 |
| ஜோஹன்சியா | 500 |
| கில்ராய் | 2000 |
| ஜோயல் | 500 |

## கல்வி நிதி


| | |
|---|---|
| தூய அசிசியார் அன்பியம் | 800 |
| அருளப்பர் அன்பியம் | 100 |
| மாதாவின் மகள் | 500 |
| ஜெயந்தி | 200 |
| அன்ன சுந்தரி | 200 |
| R. லூயிஸ் | 100 |
| A. ராணி | 200 |
| S. ராஜேந்திரன் | 150 |

## முதியோர் நிதி

| | |
|---|---|
| குழந்தை யேசு அன்பியம் | 100 |
| தூய அசிசியார் அன்பியம் | 800 |
| பவுல் அன்பியம் | 600 |
| அன்னை தெரசாள் அன்பியம் | 800 |
| மாதாவின் மகள் | 500 |
| S. ராஜேந்திரன் | 150 |

## 2017 ஆம் ஆண்டிற்கான திருவழிப்பாட்டு அட்டவணை

| நாள் | சிறப்பிப்பவர்கள் | பாதுகாவலர் திருவிழா |
|---|---|---|
| அக்.29. நவ.4 | உலக இரட்சகர் அன்பியம் | நவ. 25 |
| நவ. 5-11 | தூய ஆண்ட்ரு அன்பியம் | நவ. 30 |
| நவ. 12-18 | கிறிஸ்து அரசர் அன்பியம் | நவ. 20 |
| நவ. 19-25 | நற்கருணை வீராங்கனை சபையினர் | |
| நவ. 26 டிச. 2 | தூய காணிக்கை அன்னை அன்பியம் | நவ.21 |
| டிச. 3-9 | தூய அமலோற்பவ மாதா சபை (இளம் பெண்கள்) | டிச. 8 |
| டிச. 10-16 | தூய சவேரியார் அன்பியம் | டிச. 3 |
| டிச. 17-23 | தூய பிரகாசி அம்மாள் அன்பியம் | டிச. 13 |
| டிச. 24-30 | திருக்குடும்ப சபை | டிச.28 |



# விவிலிய வினாப் போட்டி

**நவம்பர் 2017**

(திருப்பாடல் 31 முதல் 70 முடிய)

**வினாக்கள்**

1. பேறுபெற்ற இனம் எது?
2. யாருடைய வாய் ஞானத்தை அறிவிக்கும்?
3. தம் ஆயுள் காலத்தில் பாதிகூட தாண்டாதவர் யார்?
4. எது தன் பலனை ஈந்தது?
5. துன்பநாளில் ஆண்டவர் யாரை விடுவிப்பார்?
6. எங்கிருந்து கிடைக்கும் நன்மைகளால் நாங்கள் நிறைவு பெறுவோம்?
7. என்னைப்பற்றி பாட்டுக்கட்டுவோர் யார்?
8. எதனால் என் வலிமை குறைந்து போகின்றது?
9. பொல்லாரின் மனக்கண்களில் எது இல்லை?
10. அழிவுச் செயலையே புகலிடமாய்க் கொண்டவன் யார்?
11. எப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது?
12. கடவுளே எத்தகைய உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும்?
13. எனக்கு பாதம் கழுவும் பாத்திரம் எது என்கிறார் கடவுள்?
14. எது கடவுளின் நீதியை எடுத்தியம்பும்?
15. கோடையின் வறட்சி போல வறண்டு போனது எது?
16. யாருடைய மரபினர் இறையரசி பெற்றவராய் இருப்பர்?
17. கடவுளின் தலைச்சீரா எது?
18. என் தலைமுடிகளைவிட மிகுதியானவை எவை?
19. யாருக்கு நன்மை ஏதும் குறையாது?
20. யாருடைய எலும்புகளை கடவுள் சிதறடிப்பார்?

தொகுப்பு: **மெர்ஸி சுகுமார்**

**குறிப்பு:**

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள்:15.11.2017**

1. தனித்தாளில் எழுதி, கேள்வித்தாளை இணைக்க வேண்டும்.
2. நகல் (ஜெராக்ஸ் காபி) வைக்கக்கூடாது.
3. போட்டிக்குரிய முழு விவிலியப் பகுதியை வாசியுங்கள்.
4. போட்டியில் ஆசிரியரின் முடிவே இறுதியானது.
5. தெருப்பெயர் குறிப்பிட வேண்டாம். அன்பியங்களின் பெயர்களைக் குறிப்பிடவும்.

*செய்திகள் சில வரிகளில்...*

## (செப்டம்பர் 21 முதல் அக்டோபர் 20 முடிய)

1. இங்கிலாந்தின் இளம் கோடீஸ்வரர் ஆக 19 வயது இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இளைஞர் அஷய் ரூபரேலியா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
2. தெற்கு சூடானில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள இந்திய அமைதிப் படை வீரர்கள் 50 பேருக்கு ஐக்கிய நாடுகள் சபை, விருது வழங்கி கவுரவித்துள்ளது.
3. கிழக்கு அண்டார்ட்டிகா பகுதியில் அடெய்லி பென்குவின்கள் பருவ நிலை மாற்றம் காரணமாக அதிக அளவில் உயிரிழந்துள்ளதால் ஆராய்ச்சியாளர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.
4. பிரிண்டர் மூலம் உருவாக்கப்பட்ட உலகின் முதல் 3-டி பிரிண்டட் பாலம் நெதர்லாந்தில் மக்களுக்காக திறந்து விடப்பட்டுள்ளது.
5. ஜப்பானின் விண்கலமான செலின், சந்திரனில் 50 கி.மீ நீள குகை இருப்பதை போட்டோ எடுத்து அனுப்பியுள்ளதாக விஞ்ஞானிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.
6. வங்காளதேசத்தின் அகதிகள் முகாமில் சுமார் 3,40,000 ரோஹிங்யா குழந்தைகள் உணவு, குடிநீர் இல்லாமல் தவித்துவருகின்றனர்.
7. சர்வதேச குழந்தைகளுக்கான விருதுக்கு தமிழகத்தில் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சார்ந்த, நரிக்குறவர் சமூகத்தைச் சார்ந்த மாணவர் சக்தியின் (வயது 12) பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
8. எவரெஸ்ட் மலை சிகரத்தின் உயரத்தை 1955 ஆம் ஆண்டுக்குப் பிறகு மீண்டும் அளக்க நேபாள அரசு முடிவு செய்துள்ளது இதற்கு ஆகும் செலவு 16 கோடி ரூபாயாகும்.
9. பிரதாம் யு.எஸ்.ஏ எனப்படும் அரசு சாரா அமைப்பு இந்தியாவில் ஏழை குழந்தைகளுக்கு கல்வி வழங்குவதற்காக 3.25 கோடி ரூபாய் நிதி திரட்டியுள்ளது.
10. நான்கு ஆண்டுகளுக்கு முன், ஜப்பானிடம் ஒப்படைக்கப்பட்ட ஒலிம்பிக் தீபம், எதிர்பாராதவிதத்தில் அணைந்து, அவசரமாக மீண்டும் ஒளியேற்றப்பட்ட ரகசியத்தை ஜப்பான் அதிகாரி அம்பலப்படுத்தியுள்ளார்.
11. ஐஸ்கிரீம் தயாரிப்பில் சீனா முதலிடத்தைப் பிடித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.
12. தென்னாப்பிரிக்காவின் டர்பன் நகரில் மகாத்மா காந்தி அருங்காட்சியகத்தை மத்திய வெளியுறவுத்துறை இணையமைச்சர் வி.கே.சிங் திறந்து வைத்தார்.

A. **ரேகா ஜெயசீலன்** B.A, தூய ஆண்ட்ரூ அன்பியம்

## வரவேற்கிறோம்

**தாய் திருச்சபையெனும் எழில்மிகு பூங்காவில் புதிதாக மலர்ந்துள்ள அன்புக் குழந்தைகளை வரவேற்கிறோம், செபிக்கிறோம்.**

| திருமுழுக்கு | குழந்தையின் பெயர் | பிறந்தநாள் | பெற்றோர் பெயர் |
|---|---|---|---|
| 24.09.17 | ஆவேலின் மரியா | 11.07.17 | அந்தோணி பிராங்க்லின் மவுன் ஜெஸ்மி |

## வாழ்த்துகிறோம்

**இல்லறமெனும் நல்லறந்தனில் இம்மாதத்தில் நுழைந்து இருமணங்கள் இணைந்து குடும்பம் எனும் குட்டித் திருச்சபையை உருவாக்கும் நம் பங்கு தம்பதியர்களை வாழ்த்துகிறோம். செபிக்கிறோம்.**

| வ.எண் | மணநாள் | மண இடம் | மணமக்கள் |
|---|---|---|---|
| 1 | 01.10.17 | வடக்கன்குளம் | அசோக் ரவி – ஜெஸிந்தா |

## வருந்துகிறோம்

**இவ்வுலக வாழ்வெனும் பயணத்தை நிறைவு செய்து இறைவனின் விண்ணக தோட்டத்தில் மலர்ந்துள்ள ஆன்மாக்களை நினைவு கூறுகிறோம் செபிக்கிறோம்.**

| இறந்த தேதி; | இறந்தவர்களின் பெயர் | தந்தை / கணவர் பெயர் |
|---|---|---|
| 19.09.2017 | அருள் சுசீலா மேரி | சிலுவைராஜ் |
| 02.10.2017 | செந்தாமரம் | |
| 09.10.2017 | தாமஸ் அந்தோணி | ஜேசுதாசன் |
| 11.10.2017 | சாராள் | உத்திரிய நாடார் |
| 12.10.2017 | அன்ன புஷ்பம் | அந்தோணி நாடார் |

### *முதன் முதலாக*

1. முதன் முதலில் காகிதத்தைத் தயாரித்தவர்கள் *–சீனர்கள்*
2. முதன் முதலில் பேனாவை உருவாக்கியவர்கள் *–எகிப்தியர்கள்*
3. முதன் முதலில் பேண்டேஜ் துணியை அறிமுகப்படுத்தியவர்கள் *–எகிப்தியர்கள்*
4. முதன் முதலில் முகப்பவுடர் தயாரித்தவர்கள் *–இத்தாலியர்கள்*
5. முதன் முதலில் ஐஸ்கீரிமைக் கண்டுபிடித்தவர் *–பிரெஞ்சுக்காரர்கள்*

**M.மைக்கிள் ரெனோ**

# அன்றாட உணவு - நவம்பர் 2017

| தேதி | திருநாட்கள் | வாசகம் | திருப்பாடல் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | புனிதர் அனைவர் | I தி.வெ. 7: 2–4, 9–14 | 24 | மத் 5:1–12 |
| | | II 1 யோவா 3: 1–3 | | |
| 2 | இறந்த விசுவாசிகள் நினைவு | I சாஞா. 4: 7–15 | 23 | லூக் 7:11–17 |
| | | II 1 கொரி 15: 51–57 | | |
| 3 | புனித மார்டின் தெ போரசு | உரோ 9: 1–5 | 147 | லூக் 14:1–6 |
| 4 | புனித சார்லசு பெரோமியோ | உரோ 11: 1–2,11–12,25–29 | 94 | லூக் 14:1,7–11 |
| 5 | பொதுக்காலம் 31 –ஆம் ஞாயிறு | I மலா. 1:14 2:1–2, 8–10 | 131 | மத் 23:1–12 |
| | | II 1 தெச 2: 7–9, 13 | | |
| 6 | திங்கள் | உரோ 11: 29–36 | 69 | லூக் 14:12–14 |
| 7 | செவ்வாய் | உரோ 15: 5–16 | 131 | லூக் 14:15–24 |
| 8 | புதன் | உரோ 13: 8–10 | 112 | லூக் 14:25–33 |
| 9 | லாத்தரன் பேராலய நேர்ந்தளிப்பு | I எசே 47: 1–2, 8–9, 12 | 46 | யோவா 2:13–22 |
| | | II 1 கொரி 3: 9–11, 16–17 | | |
| 10 | புனித லெயோ | உரோ 15: 14–21 | 98 | லூக் 16:1–8 |
| 11 | புனித மார்டின் | உரோ 16: 3–9,16,22–27 | 145 | லூக் 16:9–15 |
| 12 | பொதுக்காலம் 32 ஆம் ஞாயிறு | I சாஞா. 6: 12–16 | 63 | மத் 25:1–3 |
| | | II 1 தெச 4: 13–18 | | |
| 13 | திங்கள் | சாஞா. 1: 1–7 | 139 | லூக் 17:1–6 |
| 14 | செவ்வாய் | சாஞா.2: 23–3:9 | 34 | லூக் 17:7–10 |
| 15 | புனித ஆல்பர்த்து | சாஞா.6: 1–11 | 82 | லூக் 17:11–19 |
| 16 | புனித மார்க்கரித்தா | சாஞா.7: 22–31 | 119 | லூக் 17:20–25 |
| 17 | புனித எலிசபெத்து | சாஞா. 13: 1–9 | 19 | லூக் 17:26–37 |
| 18 | புனித பேதுரு, பவுல் | சாஞா. 18: 14–16,19: 6–9 | 105 | லூக் 18:1–8 |
| 19 | பொதுக்காலம் 33 ஆம் ஞாயிறு | I நீமொ31:10–13,19–20, | 128 | மத் 25:14–30 |
| | | 30–31 II 1தெச 5:1–6,13 | | |
| 20 | திங்கள் | 1மக்1:10–15,41–43,63–64 | 119 | லூக் 18:35–43 |
| 21 | புனித கன்னிமரியாள் | செக் 2: 10–13 | லூக் 1 | மத் 12:46–50 |
| | காணிக்கையானது. | | | |
| 22 | புனித செசிலியா | 2மக் 7:1, 20–31 | 17 | லூக் 19:11–29 |
| 23 | புனித கிளாமெந்து | 1மக் 2:15–29 | 50 | லூக் 19:41–44 |
| 24 | புனித ஆன்ரு டுங்லாக் தோழர்கள் | 1மக் 4: 3–37, 52–59 | 1 குறி 29 | லூக் 19:45–48 |
| 25 | புனித கேத்தரின் | 1மக் 6: 1–13 | திபா 9 | லூக் 20:27–40 |
| 26 | கிறிஸ்து அரசர் பெருவிழா | I எசே 34: 11–12, 15–17 | 23 | மத் 25:31–46 |
| | | II 1கொரி 15: 20–26,28 | | |
| 27 | திங்கள் | தானி 1: 1–6, 8–20 | தானி (இ) 1 | லூக் 21:1–4 |
| 28 | செவ்வாய் | தானி 2: 31–45 | தானி (இ) 1 | லூக் 21:5–11 |
| 29 | புதன் | தானி 5: 1–28 | தானி (இ) 1 | லூக் 21:12–19 |
| 30 | புனித அந்திரேயா அப் | உரோ 10: 9–18 | திபா 18 | மத் 4:18–22 |

உடன் பிறந்தாருள் மூத்தவர் மதிப்பிற்குரியவர் (சீ.ஞா 10: 20)

## அன்றாட உணவு - டிசம்பர் 2017

| தேதி | திருநாட்கள் | வாசகம் | திருப்பாடல் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | வெள்ளி | தானி 7:2-14 | தானி(இ)1 | லூக் 21:29-33 |
| 2 | சனி | தானி 7:15-27 | தானி(இ)1 | லூக் 21:34-36 |
| 3 | திருவருகைக்கால 1 ஆம் ஞாயிறு | I எசா 63: 6-17,64:1,3-8<br>II 1 கொரி 1:3-9 | திபா 80 | மாற் 13:33-37 |
| 4 | புனித பிரான்சிஸ்கு சவேரியார் | I எசா 61: 1-3<br>II 1 கொரி 9:16-19, 22-23 | 117 | மாற் 16:15-20 |
| 5 | செவ்வாய் | எசா 11:1-10 | 72 | லூக் 10:21-24 |
| 6 | புதன் | எசா 25:6-10 | 23 | மத் 15:29-37 |
| 7 | வியாழன் | எசா 26:1-6 | 118 | மத் 7:21, 24-27 |
| 8 | புனித மரியாளின் அமலோற்பவம் | I தொ நூ 3: 9-15,20<br>II எபே 1:3-6, 11-12 | 98 | லூக் 1:26-38 |
| 9 | சனி | எசா 30:19-21, 23-26 | 147 | மத் 9:35-10:1, 6-8 |
| 10 | திருவருகைக்கால 2 ஆம் ஞாயிறு | I எசா 40: 1-5,9-11<br>II 2 பேது 3:8-14 | 85 | மாற் 1:1-8 |

## கல்வி நிதி வழங்கும் விழா

பங்கு கல்விப் பணிக்குழு கல்வி நிதி வழங்கும் விழா 1-10-2017 ஞாயிறு காலை 10 மணியளவில் பங்கு அலுவலகத்தில் நடைபெற்றது. விழாவிற்கு வருகை தந்த மாணவச் செல்வங்களையும் பெற்றோர்களையும் கல்விப் பணிக்குழு தலைவர் திரு. **கே. ஞானபாண்டியன்** வரவேற்றுப் பேசினார். விழாவிற்கு தலைமை வகித்து துணைப்பங்குத் தந்தை அருட்திரு. **தா. சூசைமணி** அடிகள் நிதியுதவியை வழங்கினார்கள்.

ஐந்து மாணவ மணிகளுக்கு மொத்தம் ரூ 22,000 நிதியுதவி அளிக்கப்பட்டது. தந்தை தமது உரையில் மாணவர்கள் கல்வியில் தேர்ச்சிபெற்று இறைப்பக்தியுடனும் ஒழுக்கத்துடனும் வாழ வேண்டும் என்று வலியுறுத்தினார். எதிர்காலத்தில் வாய்ப்பு வரும்போது ஏழை மாணவர்களுக்கு தாராளமாக நிதியுதவி செய்ய முன்வரவேண்டும் எனவும் தந்தை கேட்டுக் கொண்டார். விழாவிற்கு கல்விப்பணிக்குழு பொருளாளர் திரு. **எம். ஞானராஜ்** முன்னிலை வகித்தார். செயலாளர் திரு. **டி. எம். மாணிக்கராஜ்** நன்றி கூற விழா நிறைவு பெற்றது.

## விவிலிய வினாப் போட்டி

**அக்டோபர் மாத விவிலிய வினாப் போட்டியில் கலந்து கொண்டு சரியான விடை எழுதி குலுக்கல் முறையில் பரிசு பெறும் இருவர்:**

முதல் பரிசு : ***சகாய குமாரி,*** யூதா ததேயு அன்பியம்
இரண்டாம் பரிசு : **ஜெயசுதா பிரதீப்,** பெரியநாயகி மாதா அன்பியம்

**_சரியான விடை எழுதியவர்கள்:_**

**அன்பியங்கள்:**

**இராயப்பர்**: சரோஜினி, அன்ன அரன்சா, மெரிசா சீலன், ஜேஸ்வர் எபின், ஜெனிஷ். **வளன்**: செலின் தாமஸ் **சூசையப்பர்**: அனிற்றா ஸ்டீபன், ரோஸ்லின் பிரேமா, ஆரோக்கிய ஜெனிபர், ராபின். **பெரியநாயகி மாதா**: சகாய ஜோ ரால்பின், நினிய ரக்ஷின், ஆரோக்ய லினடோ, பாத்திமா, தினேஷ், அரவிந்தா, மைக்கிள், ரேவிகா ராஜன், பெல்ஸியா கில்பர்ட். **அந்தோணியார்**: சந்திரிகா அல்போன்ஸ், பெர்லின் ரோசாரி, தஸ்நேவிஸ், பமிலா ரெட்சன், ஜெயா, ரூபா விவேக். **மிக்கேல்**: சசி புரொமில்டன். **அன்னை தெரசா:** அனுஷியா டேவிட், மரிய ஹெலன். **சிறுமலர் குழந்தை தெரசா:** புஷ்பம், ரிண்டா ஜெகன், ஜோதி அப்பாவு. **பரிசுத்த திருக்குடும்பம்:** ஜோஸ்பின் மனோகர், மரிய ஸ்நேகா எட்வின், நிவிதா மெல்வின், அந்தோணி பிரபா ஜெயரூபன், ஜோண் ராஜ சஜினா, ஜெயக்கொடி பவுல். **யூதா ததேயு:** ரேமந்த் ஷபின், சான்றிரியா. **வில்லியனூர் மாதா:** ஜெனிஸ்டா ஷாபி, ஜெபினா வெர்ஜிஸ்டா, அன்ன புளோரின். **கிறிஸ்து அரசர்:** ரோஸ்லின் தாசன், அனிட்லரிஸ். **பிரகாசியம்மாள்:** ரஞ்சிதம் வில்சன், சுரேஷ் வசந்தி, அன்னம். **அமல அன்னை:** அந்தோணி வெண்மதி, ஜோஸ்பின் கரோலின். **பூண்டி மாதா:** மரிய ரமேஷ் ரூபா, ரமேஷ், சித்ரா அருள்ஜார்ஜ், ஆனந்தி, திபாகர், மீனா பாலன், ஜெஸிந்தா பிரபு. **சவேரியார்:** ஹென்சியா சுவிஷ். **பவுல்:** ஹில்டா, ஜாய்வின். **கார்மல் அன்னை:** ஹெலன் ராணி, சுபா ராஜன். **அருளப்பர்:** டயானா ராபர்ட், லீலா கார்ட்டன். **பாத்திமா அன்னை:** ரேகா மகிழன். **ஆசிர்வாதப்பர்:** அன்னம், மெர்லின் ஜஸ்டினா, செரின் பிரமிளா. **ஆரோக்கிய அன்னை:** சாந்தி. **தோமையார்:** ஜெயா பால்சிங். **இஞ்ஞாசியார்:** ஜெசி வில்லியம், ராஜகுமாரி சேவியர். **கபிரியேல்:** ராணி ஆல்வின், யாமினி திலக். **அமிர்தநாதர்:** நான்சி கிறிஸ்டினா. **அடைக்கல மாதா:** சிமில் ஷரினா, இந்திரா மைக்கிள், சிந்தியா சேவியர். **உலக இரட்சகர்:** பெர்லின் அரசன். **தேவசகாயம்:** கீதா கண்ணன். **ஜார்ஜியார்:** மெர்ஸி டயானா, சிந்துஜா விஜயன். **சூசைநாதர்:** டெய்சி ரெத்தினம், செபஸ்டின் ராணி. **குழந்தை இயேசு:** ஆலிஸ். **ஜாண்போஸ்கோ:** ஐஸிலின் கோஸ்தா. **நிக்கோலாஸ்:** மரிய ரோபிகா, செல்வராணி. அருட்சகோதரி: **ரொமானா,** குரோம்பேட்டை (சென்னை) நிமாலின் லொஞ்சின்.

# விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி

**அக்டோபர் மாத விவிலிய குறுக்கெழுத்துப் போட்டியில் கலந்து கொண்டு சரியான விடை எழுதி குலுக்கல் முறையில் பரிசு பெறும் இருவர்.**

முதல் பரிசு : **ஜெய ஷெர்லி,** பாலகிருஷ்ணா ஆங்கிலப் பள்ளி

இரண்டாம் பரிசு : **ஆன்றோ நிவிஜா,** தூய தெரசாள் மேல்நிலைப்பள்ளி

## சரியான விடை எழுதியவர்கள்:

**தூய அன்னாள் ஆரம்பப்பள்ளி:** ஆன்றோ ஜெர்ஷன், ஆன்றோ ஜெனோ ரிஷாக், ஜெபினா வெர்ஜிஸ்டா, ஜெனிஸ்டா ஷாஃபி, நோயல் ரோணிஷ், ஜோயல் ரிகானி, ஏஞ்சல் ரியா, ஆரோக்கிய வர்ஷனா, நினிய ரக்ஷின், வின்சியா, திபிக்ஷா, மெல்வின்.

**பாலகிருஷ்ணா ஆங்கிலப்பள்ளி:** சிஜன், தன்யா கார்ட்டன், மரிய கொஷிகா, சகாய டேஷியல், ஆரோக்ய லினடோ, குளோரியா கார்ட்டன், சினேகா, மெலினா விண்ணரசி, மைக்கிள் திரினிதா, அந்தோணி அஜிஷ், அசின், அன்லி, பவிஷா, ஜோவிட்டா, ஜோவின், ரேமந்த் ஷபின், ஜான்சி, அல்கோ ரிச்வின், சகாய ரேஷ்மி, சகாய ஜெனோசன், ஜேவிஷ், சஞ்சய் ஜேசுவா, ரக்ஷனா, திவாகர் அருண், ஜோ ரெனில்டா, தேவ லிண்டா அட்லின், ஜெய ஷைனி, ஜெய சாரோன், டிக்ஷா, ஜெஃப்ரி அபிஜா, ஏஞ்சல் ஸ்வேதா, சகாய சபினா, கெய்சர் பிரான்சன், மேத்யா டாப்லின்

**தூய தெரசாள் துவக்கப்பள்ளி:** அமல நித்தீஸ், சகாய அன்டோ ஜெபின்.

**அந்தோணியார் துவக்கப்பள்ளி:** ஜெஸி.

**ஜோசப் ஆரம்பப்பள்ளி:** ஆக்னஸ் ஷெரின், அன்றனி ரியான், யோஸ் ரஃபேல், ஜேட் அல்டோ, ஜியன் கிறிஸ்ட்.

**நேரு.தே.மேல்நிலைப்பள்ளி:** நிவி சினேகா, டினிஷா, அந்தோணி சுபிக்ஷா

**புள்ளிமான் ஆரம்பப்பள்ளி:** விபுல் போஸ்கோ

**திருக்குடும்ப நடுநிலைப்பள்ளி:** மரிய ஆக்னஸ் ஜெஸி, மாதேஷ் ராஜ்

**கிங்ஸ் ஆரம்பப்பள்ளி:** ரோகித் அரசன்.

**ஜீசஸ் ஆரம்பப்பள்ளி:** வாகன் மெஸ்டிக், மேக் டேரியான், மேக் டேட்னிக், ஷெல்சியா, நினோ ஜெப் அப்பாவு, ஷேன்சியா, டி.மேரி தர்ஷினி

**தூய தெரசாள் மேல்நிலைப்பள்ளி:** ஆன்றோ சுஜின். ஜோண் ராஜ சஜினா, மரிய ரீதா அபிஷா

**கல்லூரி:** லெரின்ஸ், ஜீலியஸ் ரோஹன், ஜெர்மி ஜெஸ்டினா, பியோ ஜெரிக், சகாய ஜோ ரால்பின், ஜெனிஷ், ஜோஸ்வர் எபின், மைக்கிள் அபிலேஷ், ஷிபானி பியூலா, அந்தோணி மிக்கேல் ஜாக்சன், மெர்லின், லிண்டோ, அன்ன அரன்சா, அரவிந்தா மைக்கிள், அஜித் கில்பார்ட், குரோம்பேட்டை (சென்னை) A.நிமாலின் லொஞ்சின்

# விவிலியத் தேர்வு - 2017 செப்டம்பர்

## எபேசியர், பிலிப்பியர் திருமுகங்கள்

### பரிசு பெறுபவர்கள்

| எண் | பெயர் | அன்பியம் | மதிப்பெண் |
|---|---|---|---|
| 1 | A. ஜெயசுதா பிரதீப் (முதல் பரிசு) | தூய பெரிய நாயகி | 100 |
| 2 | A. மெரிசா (முதல் பரிசு) | தூய இராயப்பர் | 100 |
| 3 | S. சகாய மலர் (முதல் பரிசு) | தூய வில்லியனூர் மாதா | 100 |
| 4 | J. ரஞ்சிதம் வில்சன் (முதல் பரிசு) | தூய பிரகாசியம்மாள் | 100 |
| 5 | S. ஜென்ஸி டயானா (முதல் பரிசு) | T.கள்ளிகுளம் (ஜார்ஜியார்) | 100 |
| 6 | S. ஆனந்தி (முதல் பரிசு) | தூய பூண்டி மாதா | 100 |
| 7 | P. மெர்ஸி டயானா (முதல் பரிசு) | தூய ஜார்ஜியார் அன்பியம் | 100 |
| 8 | G. மரியதங்கம் (முதல் பரிசு) | கிறிஸ்து அரசர் | 100 |
| 9 | A. அந்தோணி வெண்மதி (முதல் பரிசு) | தூய அமல அன்னை | 100 |
| 10 | ஜோஸ்பின் மனோகர் (முதல் பரிசு) | பரிசுத்த திருக்குடும்பம் | 100 |
| 11 | M.ஆரோக்கிய சிமில்ஷரினா (முதல் பரிசு) | தூய அடைக்கல மாதா | 100 |
| 12 | Y. அந்தோணி மரிய சுபா (முதல் பரிசு) | தூய கார்மல் அன்னை | 100 |
| 13 | J. செரின் பிரமிலா (முதல் பரிசு) | தூய ஆசீர்வாதப்பர் | 100 |
| 14 | அன்னம் (முதல் பரிசு) | தூய ஆசீர்வாதப்பர் | 100 |
| 15 | K. லீலா கார்ட்டன் (முதல் பரிசு) | தூய அருளப்பர் | 100 |
| 16 | சுகிலா ஜேம்ஸ் (முதல் பரிசு) | தூய மிக்கேல் | 100 |
| 17 | S. மெர்ஸி சுகுமார் (முதல் பரிசு) | தூய காணிக்கை அன்னை | 100 |
| 18 | ரேகா மகிழன் (முதல் பரிசு) | தூய பாத்திமா மாதா | 100 |
| 19 | A.மரிய நிவ்யா (முதல் பரிசு) | தூய சவேரியார் | 100 |
| 20 | A.சகாய குமாரி (முதல் பரிசு) | யூதா ததேயு | 100 |
| 21 | ப. ஜோலிஸ் எட்வின் (2-ம் பரிசு) | தூய பெரிய நாயகி | 99 |
| 22 | M. கஸ்மீர் (2-ம் பரிசு) | கிறிஸ்து அரசர் | 99 |
| 23 | A. மரியஸ்நேகா எட்வின் (2-ம் பரிசு) | பரிசுத்த திருக்குடும்பம் | 99 |
| 24 | V.ராஜேஸ்வரி (2-ம் பரிசு) | பரிசுத்த திருக்குடும்பம் | 99 |
| 25 | L. ரூபா (2-ம் பரிசு) | தூய இஞ்ஞாசியார் | 99 |

90 மதிப்பெண்களுக்கு மேல் பெற்றவர்

**A. நிவிதா மெல்வின்** (பரிசுத்த திருக்குடும்பம்)

# பரிசுத்த திருக்குடும்ப ஆலயம்-வடக்கன்குளம்

## 2017, செப்டம்பர் மாத வரவு செலவு விவரம்

| வரவு | ரூபாய் |
|---|---|
| மண்டபம் | 79,857 |
| அந்தோணியார் ஆலய நன்கொடை | 36,000 |
| உண்டியல் காணிக்கை | 92,140 |
| குடும்ப கையேடு | 700 |
| திருமணம் | 1,500 |
| அடக்கம் | 1,250 |
| கல்லறை கட்ட | 2,000 |
| ஞானஸ்தானம் | 3,000 |
| கடை வாடகை | 96,650 |
| ஞாயிறு காணிக்கை | 61,110 |
| ஓஸ்தி, ரசம் | 3,000 |
| வாழைத்தார் | 500 |
| திருப்பலி கருத்து | 11,800 |
| வங்கி வட்டி | 240 |
| **மொத்தம்** | **3,89,747** |
| முன் கையிருப்பு | 9,69,107 |
| **மொத்த வரவு** | **13,58,854** |
| மொத்தசெலவு | 4,92,075 |
| **மொத்த கையிருப்பு** | **8,66,779** |

| | |
|---|---|
| TMB | 7,58,820 |
| SIB | 19,163 |
| Cash in Hand | 88,796 |
| **Total** | **8,66,779** |

| செலவு | ரூபாய் |
|---|---|
| குருக்கள் தியானம், அன்பிய பொறுப்பாளர்கள் மற்றும் நிதிக்குழு கூட்டம் | 4,280 |
| மின்கட்டணம் | 68,273 |
| தொலைபேசி | 3,502 |
| வழிபாட்டுச் செலவு | 900 |
| ஒளி பிரதிஇ தபால் செலவுகள் | 345 |
| பங்குத்தந்தையர் பராமரிப்பு | 14,000 |
| பணியாளர் ஊதியம் | 27,500 |
| நடுநிலைப்பள்ளி சம்பளம் | 4,000 |
| பயணச்செலவு | 3,780 |
| பாடகர்குழு, பீடப்பூக்கள், மறைகல்வி ஆசிரியர்கள்-திருப்பயணம் | 15,000 |
| முதல் சனி செலவு | 1,168 |
| மலர்வளையம் | 1,000 |
| திருமண வாழ்த்து - நிதிக்குழு | 250 |
| தினை, குப்பை அள்ள, சலவை | 2,110 |
| கோவில் பெஞ்ச் ஸ்பான்ச் | 1,650 |
| பங்கு பராமரிப்பு | 3,481 |
| மண்டபம் மணல் | 4,600 |
| கடப்பாக்கல், தரைஓடு | 12,570 |
| Cement | 5,700 |
| இரும்பு கதவுகள், கழிப்பறை மேற்கூரை (Adv) | 44,000 |
| மின்பொருட்கள், குழாய்ப்பணி மற்றும் கூலி | 66,111 |
| கட்டட ஒப்பந்தக்காரர் | 75,000 |
| எரிவாயு அடுப்பு, மேஜை | 40,000 |
| நாற்காலி | 27,600 |
| பாத்திரப்பொருட்கள் | 42,610 |
| திருப்பலி கருத்து மறை மாவட்டம் | 5,800 |
| திருப்பலி கருத்து பங்குத்தந்தையர் | 6,000 |
| ஆசிரியர் தின செலவு | 3,845 |
| விளையாட்டுப் போட்டி செலவு, மாணவர்கள் | 7,000 |
| **மொத்த செலவு** | **4,92,075** |

**இ. ஜேசு பொன்னம்பலம்**
பங்கு நிதிக்குழு பொருளாளர்

**அருட்திரு. ரா. ததேயுஸ் ராஜன்**
பங்குத்தந்தை

# விவிலிய குறுக்கெழுத்துப்போட்டி

**திருப்பாடல்கள் 56 முதல் 60 முடிய**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | 4 | |
| 5 | | | | | | 6 |
| | 7 | | | | | |
| 8 | | | | | | |
| | | 9 | | | | |
| | | | 10 | | | 11 |
| 12 | | | | 13 | | |

**இடமிருந்து வலம்**

1. .............. எனக்கென்ன செய்ய முடியும்?
5. கடவுளின் ....................... நான் புகழ்கின்றேன்.
12. என் ...................... எண்ணிக் கையை நீர் அறிவீர்

**வலமிருந்து இடம்**

6. நான் நடக்கும் வழியில் எனக்குக் ............................. வைக்கின்றனர்.
7. பிறப்பிலிருந்தே ................ பேசித் திரிகின்றனர்.
10. ........................ யை மயக்கும் மதுவை எங்களுக்குக் குடிக்கக் கொடுத்தீர்.
11. ............... சூழ் நகரினுள் என்னை இட்டுச் செல்பவர் யார்?

**மேலிருந்து கீழ்**

2. என் ................. நாள்தோறும் கொடுமைப்படுத்துகின்றனர்.
3. நான் உம்மை நோக்கி .................. நாளில் என் எதிரிகள் புறமுதுகிட்டு ஓடுவர்...
4. பிற இனத்தார் அனைவரையும் ...................... எழுந்து வாரும்.
5. அவர்கள் ...................... பேசுவதைக் கவனியும் அவர்களின் நாவின் சொற்கள் வாள் போன்றவை.
7. அவர்கள் தம் பாதங்களைப் .................... இரத்தத்தில் கழுவுவர்.
8. நாய்களைப் போல ................ க் கொண்டு நகரினுள் சுற்றித் திரிகின்றார்கள்.
9. ................... யுடன் ஆளும் கடவுள் ஒருவர் இருக்கின்றார்.

**கீழிலிருந்து மேல்**

9. காட்டாற்று .......................... போல அவர்கள் மறைந்தொழியட்டும்.
11. ..................... என்னை ஆட்கொள்ளும் நாளில் உம்மையே நான் நம்பியிருப்பேன்.
13. உமது தோற்பையில் என் ................ சேர்த்து வைத்துள்ளீர்.

*விடைகள் வந்து சேர கடைசி நாள் 16-11-2017*

தொகுப்பு: **டெய்சி சந்தர்**

## கணக்குப்புதிர் விடைகள்

*1. ஐந்து தவளைகள். அந்த மூன்று தவளைகளும் குளத்தில் குதிக்க நினைத்ததே தவிர, குதிக்கவில்லை.*

*2. எம்.ஜி.ஆர் என்று சொன்னவர்தான் பொய் சொன்னார். ஏனெனில் எம்.ஜி.ஆர் உயிருடன் இல்லை.*

*3. ஏழு நாட்களில்*

<u>அடிக்குறிப்பு தொகுப்பு:</u>

திருமதி. **டெய்சி விமலரசி**
திருமதி. **ஜெஸி லிபியா**